بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 5 | இதழ் 42

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

27 ஸஃபர் 1442 ஹிஜ்ரி கமரி 15 இகா 1399 ஹிஜ்ரி ஷம்ஸி

15 அக்டோபர் 2020

## அல்லாஹ்வின் கட்டளை

مَنۡ یُّطِعِ الرَّسُوۡلَ

فَقَدۡ اَطَاعَ اللّٰہَ ۚ

وَمَنۡ تَوَلّٰی فَمَاۤ اَرۡسَلۡنٰکَ

عَلَیۡہِمۡ حَفِیۡظًا

இத்தூதருக்குக் கட்டுப்பட்டு நடக்கின்றவர் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு விட்டார் (எனப் புரிந்து கொள்ளுங்கள்). புறக்கணித்து விட்டவர்களுக்கு உம்மை நாம் கண்காணிப்பவராக அனுப்பவில்லை (என்பது நினைவிலிருக்கட்டும்).

*(அந்நிஸா : 81)*

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**எவரையும் ஏளனப் பார்வையுடன் பார்க்காதீர்கள். மனதைப் புண்படுத்தாதீர்கள். ஜமாஅத்தில் ஒருவருக்கொருவர் சண்டை, குழப்பம் ஏற்படுத்தக் கூடாது. மார்க்கத்தைச் சேர்ந்த ஏழையான சகோதரர்களை அற்பமாகப் பார்க்காதீர்கள். செல்வம் மற்றும் அழிந்து விடும் பெருமையில் பெருமிதம் கொண்டு, மற்றவர்களை ஏளனமாகவும் இழிவாகவும் கருதாதீர்கள். எவர் இறைவச்சம் கொண்டவராக இருப்பாரோ அவரே இறைவன் பார்வையில் கண்ணியமிக்கவராவார்.**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் வழிகாட்டல்கள்**

ஒருவரை நல்லெண்ணத்துடன் கருதும் வகையில் நல்லொழுக்கத்தின் நிலையை சரி செய்யுங்கள். அவருக்கு தவறாக தெரியாத நேரத்தில் தவற்றைப் பற்றி எடுத்துக் கூறுங்கள். எவரையும் ஏளனப் பார்வையுடன் பார்க்காதீர்கள்; மனதைப் புண்படுத்தாதீர்கள். ஜமாஅத்தில் ஒருவருக்கொருவர் சண்டை, குழப்பம் ஏற்படுத்தக் கூடாது. மார்க்கத்தைச் சேர்ந்த ஏழையான சகோதரர்களை அற்பமாகப் பார்க்காதீர்கள். செல்வம் மற்றும் அழிந்து போகக்கூடிய பெருமையில் பெருமிதம் கொண்டு மற்றவர்களை இழிவாகவும் ஏளனமாகவும் கருதாதீர்கள். எவர் இறையச்சம் கொண்டவராக இருப்பாரோ அவரே இறைவன் பார்வையில் கண்ணியமிக்கவராவார். اِنَّ اَکۡرَمَکُمۡ عِنۡدَ اللّٰہِ اَتۡقٰکُمۡ என இறைவன் கூறினான். (சூரா ஹுஜ்ராத் வசனம் 14) மற்றவர்களுடனும் முழுமையான நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டும். எவர் தீய ஒழுக்கத்தின் முன்மாதிரியாக இருப்பாரோ அவரும் நல்லவரல்லர். மக்கள் நமது ஜமாஅத்தின் மீது வெறும் சாக்குப் போக்குகளின் வழக்கு தொடுக்கின்றனர்...... மக்களுக்கு ஒரு பிளேக் நோய் இருக்கின்றது. நமது ஜமாஅத்திற்கு – ஒரு ஜமாஅத்திற்கு ஒரு பிளேக் நோய் இருக்கின்றது. ஜமாஅத்திலுள்ள ஒருவர் இன்னொருவரைப் பற்றி தீயதைக் கூறுகிறார் என்றால் அதனால் முழு ஜமாஅத்தின் மீது ஆட்சேபனை வந்து விடும். அறிவுடைமை, சகிப்புத்தன்மை, மன்னித்தல் ஆகிய திறமையை வளர்த்துக் கொள்ளுங்கள். அறிவீனர்களிலும் அறிவீனரின் கூற்றுகளுக்கும் எளிமையாகவும் சாந்தியுடனும் பதில் கூறுங்கள் அல்லது எந்த பதிலும் கூறாதிருங்கள். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் போதனையில் அத்தகைய ஞானமே இருந்தது என நான் அறிவேன். எவ்வளவு மென்மையான போதனையை வழங்கி வந்தார்கள்; ஆயினும் யூதர்கள் அவரை வாழ விடவில்லை. அந்தக் காலத்தின் நிலைமைக்கு இன்ஜீலின் போதனையே தேவைப்பட்டதுபோலும்! இக்காலத்தில் நமது ஜமாஅத்தின் நிலைமையும் ஏறக்குறைய அதுபோன்றே இருக்கின்றது. மார்டின் கிளார்க் கிறித்தவரின் வழக்கில் முஹம்மது ஹுஸைன் பட்டாலவி அவருக்கே சாட்சி கூறினார் என்பதை நீங்கள் பார்க்கவில்லையா? சமுதாயத்தின் மீது எந்த நம்பிக்கையும் இல்லை என்பதை இப்போது தெரிந்து கொள்ளுங்கள்.

அரசாங்கத்தைப் பொருத்தவரை – அதற்கு தீய எண்ணம் கொடுக்கப்படுகிறது. மேலும் அரசாங்கமும் ஓரளவுக்கு கட்டாயத்தில் இருக்கிறது. அது தவறான எண்ணம் கொண்டு விட்டால் – இறைவன் காப்பானாக. ஏனெனில் அது மறைவானதை அறியக் கூடியதல்ல. எனவே பலமுறை அரசாங்கத்திற்கு முன்னால் குறிப்பாக மெமோரியல் அனுப்ப வேண்டியது ஏற்பட்டது. மேலும் நமது நிலைமைகளைப் பற்றி நாமே அவர்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டியது ஏற்பட்டது. அவர்களுக்கு சரியான, உண்மையான நிகழ்வுகளைப் பற்றி தெரிய வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்யப்பட்டது. எனவே, இந்த சோதனை நாட்களில் உங்கள் ஆன்மாவைக் கஷ்டத்திற்குள்ளாக்கி இறையச்சத்தை மேற்கொள்வது பொருத்தமானதாகும். எனவே, சுருக்கமாக இந்த விஷயங்களிலிருந்து நீங்கள் அறிவுரை பெற வேண்டும்; படிப்பினை பெற வேண்டும் என்பதே எனது நோக்கமாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 193–194 காதியான் பதிப்பு 2018)

**பெண்களின் மனிதத்துவத்தை பெரிதாகக் காட்டியது இஸ்லாம் மட்டும்தான். சில மேற்கத்திய இளைஞர்கள், பெண்களின் உரிமைகளை கிறித்தவம்தான் கொடுத்திருக்கிறது எனக் கூறுகின்றனர். ஆனால், பெண்களின் உரிமைகள் தொடர்பாக இஸ்லாம் கொடுத்திருக்கும் பரந்த போதனைக்கு எதிரில் கிறித்தவ போதனை நெருங்கவும் முடியாது.**

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: وَلَہُنَّ مِثۡلُ الَّذِیۡ عَلَیۡہِنَّ بِالۡمَعۡرُوۡفِ (பெண்களாகிய அவர்களுக்கும் (ஆண்களைப் போன்ற) அதே உரிமை இருக்கிறது என்ற வசனத்தில் பொதுவான ஒரு சட்டத்தைக் கூறியிருக்கிறான். மனிதன் என்ற முறையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சரிசமமான உரிமைகள் இருக்கின்றன. பெண்கள் ஆண்களின் உரிமைகளை கவனத்திற் கொள்ள வேண்டும் என்பதைப் போன்றே ஆண்களும் பெண்களின் உரிமைகளை நிறைவேற்றுவது அவசியமாகும். இது தொடர்பாக எவ்விதமான நியாயமற்ற அம்சத்தையும் மேற்கொள்ளக் கூடாது.

ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் தோன்றுவதற்கு முன்னர் பெண்களுக்கு எந்த உரிமைகளும் ஒப்புக் கொள்ளப்படவில்லை. மாறாக, அவர்கள் செல்வங்கள், சொத்துக்கள் போன்று மாற்றப்பட வேண்டிய வாரிசாகக் கருதப்பட்டனர். அவர்களின் பிறப்பை ஆணின் மகிழ்ச்சிக்குக் காரணியாக மட்டும் கூறப்பட்டு வந்தது. தம்மைப் பெண்களின் உரிமைகளுக்கு உதவியவர்கள் எனக் கூறிக் கொள்ளும் கிறித்தவர்களின் தூய நூல்களிலும் பெண்களைப் பற்றி, புருஷனானவன் தேவனுடைய சாயலும் மகிமையிலுமாயிருக்கிற படியால், தன் தலையை

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

அபூபக்ர் நமது தலைவர் ஆவார். மேலும் அவர் நமது தலைவர் (அதாவது) பிலாலை அடிமையிலிருந்து விடுவித்தார். (ஹஸ்ரத் உமர் (ரலி))

ரஸூல் (ஸல்) அவர்களின் பாங்கு சொல்பவராக விளங்கிய மகத்தான தகுதி பெற்ற பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் பிலால் பின் ரபாஹ் (ரலி) அவர்களின் நற்பண்புகள்

ரவூஃப் பின் மக்ஸூது யூ.கே –வில் ஜுனியர் ஜாமிஆ அஹ்மதிய்யா மாணவர் (பெல்ஜியத்தைச் சேர்ந்தவர்) பாகிஸ்தானிலுள்ள இஸ்லாமாபாத்தின் முன்னாள் துணை அமீர் ஜனாப் ஸஃபர் இக்பால் குரைஷி, செனிகலைச் சேர்ந்த காபீனோகா பாஜல், லாஹூர் வழக்கறிஞர் ஜனாப் முபஷ்ஷிர் லதீஃப் சாஹிப் ஆகியோர் பற்றிய நற்குறிப்புகள் மற்றும் ஜனாஸா காயிப் தொழுகை பற்றிய அறிவிப்பு

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 11 செப்டம்பர் 2020** ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **தபூக்** மாதம் **11 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ- بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-
اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ- اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ-

இன்று நான் எடுத்துக் கூறவிருக்கின்ற பத்ர் போரில் கலந்து கொண்ட சஹாபியின் பெயர் ஹஸ்ரத் பிலால் பின் ரபாஹ் ஆகும். ஹஸ்ரத் பிலால் அவர்களுடைய தந்தையின் பெயர் ரபாஹ் ஆகும். தாயாருடைய பெயர் ஹமாமா ஆகும். ஹஸ்ரத் பிலால் அவர்கள் உமைய்யா பின் கலஃப் என்பவனின் அடிமையாக இருந்தார்கள். ஹஸ்ரத் பிலால் அவர்களின் சுட்டுப்பெயர் அபூ அப்துல்லாஹ் ஆகும். சில அறிவிப்புகளில் அபூ அப்துர் ரஹ்மான் என்றும், அபூ அப்துல் கரீம் என்றும், அபூ அம்ர் என்றும் கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் பிலால் அவர்களின் தாயார் அபிஸீனியாவைச் சார்ந்தவர்கள் ஆவார். ஆனால் தந்தையார் அரபு நாட்டைச் சார்ந்தவர் ஆவார். ஆய்வாளர்கள் கூறுவது என்னவென்றால், அவர் அபிஸீனிய செமிட்டிய இனத்தைச் சார்ந்தவர் ஆவார். அதாவது பழங்காலத்தில் செமிட்டிய அல்லது அரபுக் கோத்திரங்கள் ஆப்பிரிக்காவில் குடியேறி விட்டன. இதன் காரணமாக அவர்களின் சந்ததிகளின் நிறம் ஆப்பிரிக்காவின் பிற சமுதாயத்தினர் போல் ஆகி விட்டன. ஆனால் அங்குள்ள குறிப்பாக அடையாளங்களும் பழக்க வழக்கங்களும் அவர்களிடத்தில் உருவாகவில்லை. பிற்காலத்தில் அவர்களில் சிலர் அடிமையாகி அரபு நாட்டுக்குத் திரும்ப வந்தனர். அவர்களின் நிறம் கருப்பாக இருந்ததால் அரேபியர்கள் அவர்களை அபிஸீனியர்களாக கருதினர். அதாவது அபிஸீனியாவில் வசிக்கக் கூடியவர்களாகக் கருதினர்.

ஓர் அறிவிப்பின் அடிப்படையில், ஹஸ்ரத் பிலால் அவர்கள் மக்காவில் பிறந்தார்கள் என்றும், அவர்கள் கலப்பினத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. (அத்தப்காத்துல் குப்ரா லி இப்னி ஸஅது தொகுதி 3 பக்கம் 174–175 பிலால் பின் ரபாஹ் தாருல் குதுபில் இல்மிய்யா பைரூத் 2017) கலப்பினம் என்றால் தூய அரபு அல்லாத மக்களைக் குறிக்கும். இன்னோர் அறிவிப்பின் அடிப்படையில் அன்னார் சவார் என்னும் இடத்தில் பிறந்தார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. (அஸதுல் காபா ஃபீ மஃரிஃபதிஸ் ஸஹாபா தொகுதி 1 பக்கம் 415 பிலால் பின் ரபாஹ் தாருல் குதுபில் இல்மிய்யா பைரூத் லெபனான் 2008, குலாம் பாரீ ஸைஃப் சாஹிபின் ரோஷன் சிதாரே தொகுதி 1 பக்கம் 145) (அஸதுல் காபா – மொழியாக்கம் தொகுதி 1 பக்கம் 283 மக்நபா கலீலின் வெளியீடு) மேலும் சவார் என்பது யமன் மற்றும் அபிஸீனியாவுக்கு அருகில் இருக்கக்கூடிய கலப்பின மக்கள் அதிகமாக வசிக்கும் இடமாகும். ஹஸ்ரத் பிலால் அவர்கள் கருமை கலந்த கோதுமை நிறத்தை உடையவர்களாக இருந்தார்கள்; ஒல்லியான தேகம் உடையவர்களாக இருந்தார்கள்; அடர்த்தியான தலை முடி உடையவர்; கண்ணத்தில் மிகக் குறைவான சதை உடையவராக இருந்தார்கள்.

(ரோஷன் சிதாரே தொகுதி 1 பக்கம் 145 குலாம் பாரிஸைஃப் சாஹிபுடைய ஆக்கம்)

ஹஸ்ரத் பிலால் அவர்கள் பல்வேறு திருமணம் புரிந்திருந்தார்கள். அவர்களுடைய சில மனைவிகள் அரபு நாட்டினுடைய மிகவும் நல்ல, கண்ணியத்திற்குரிய வீட்டைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். அன்னாருடைய ஒரு மனைவியின் பெயர் ஹாலா பின்த் அவ்ஃப் ஆகும். இவர் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களின் சகோதரி ஆவார்கள். இன்னொரு மனைவியின் பெயர் ஹிந்த் கவ்லானியா என்பதாகும். பனூ புக்கைருடைய குடும்பத்தில் இருந்தும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பிலாலுக்கு திருமணம் செய்து வைத்திருந்தார்கள். ஹஸ்ரத் அபூ தர்தா (ரலி) அவர்களுடைய குடும்பத்திலும் ஹஸ்ரத் பிலால் அவர்களின் திருமணம் நடந்திருந்தது. ஆனால் எந்தவொரு மனைவியின் மூலமாகவும் அவர்களுக்கு சந்ததி பிறக்கவில்லை. (சீருஸ் ஸஹாபா பாகம் 2 பிலால் பின் ரபாஹா பக்கம் 159 உருது பாஸார் அச்சகம், கராச்சி) (அல் அஸபா ஃபீ தமீஸில் சஹாபா லி இப்னி ஹஜ்ர் அஸ்கலானி பாகம் 8 பக்கம் 339 ஹாலா பின்த் அவ்ஃப் தாருல் குதுபில் இல்மிய்யா பைரூத் 2005) (தாரீஹ் தமிஷ்குல் கபீர் லி இப்னி அஸாகிர் பாகம் 10 பக்கம் 334 திக்ர் மின் இஸ்மிஹி பிலாலிப்னி ரபாஹ். தாரு அஹ்யாயித் தராஸ் அல் அரபி பைரூத் 2001)ஹஸ்ரத் பிலால் அவர்களுக்கு ஒரு சகோதரர் இருந்தார். அவருடைய பெயர் காலிது என்பதாகும். மேலும், ஒரு சகோதரி இருந்தார். அவருடைய பெயர் குஃபைரா என்பதாகும். (அஸதுல் காபா பாகம் 1 பக்கம் 418 பிலால் பின் ரபாஹ் தாருல் குதுபில் இல்மிய்யா பைரூத் 2016)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், 'பிலாலுன் ஸாபிகுல் ஹப்ஷா' – பிலால் அபிஸீனியர்களில் முதன்மையானவர்கள் ஆவார்கள் என்று கூறினார்கள். அதாவது அபிஸீனியா மக்களில் முதன் முதலில் நம்பிக்கை கொண்டவர்கள் ஆவார்கள். (அத்தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅது பாகம் 3 பக்கம் 175 பிலால் பின் ரபாஹ் தாருல் குதுபில் இல்மிய்யா பைரூத் 2017)

ஹஸ்ரத் அனஸ் அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதில் முந்தியவர்களில் நான்கு பேர் உள்ளனர். اَنَا سَابِقُ الْعَرَبِ 'அனா ஸாபிகுல் அரப்' – அதாவது அரேபியர்களில் நான் முதன்மையானவனாக இருக்கின்றேன். 'ஸல்மானு ஸாபிகுல் ஃபுர்ஸி' அதாவது பாரசீகர்களில் ஸல்மான் அவர்கள் முதன்மையானவர்களாக இருக்கிறார்கள். (ஸீரு அஃலாமின் நுப்லாயி லி இமாமித் தவாபி பாகம் 1 பக்கம் 349 பிலால் பின் ரபாஹ் 2014)

உர்வா பின் சுபைர் அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் பிலால் பின் ரபாஹ் அவர்கள் எப்படிப்பட்ட மக்களைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள் என்றால், அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட போது, அவர் தமது மார்க்கத்தை விட்டு முகம் திருப்பி விட வேண்டும் என்பதற்காக துன்புறுத்தப்பட்டார்கள். ஆனால் அந்த மக்கள் விரும்பிய அந்த வார்த்தைகளை இவர்கள் ஒருபோதும் கூறியது கிடையாது. அதாவது அல்லாஹ்வை இவர்கள் மறுத்தது கிடையாது. அவர்களை உமைய்யா பின் கலஃப் துன்புறுத்தி வந்தான். (அத்தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅது பாகம் 3 பக்கம் 175 பிலால் பின் ரபாஹ் தாருல் குதுபில் இல்மிய்யா பைரூத் 2017) ஹஸ்ரத் பிலால் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்ட போது, அவர்களுக்கு பலவிதமான தண்டனைகள் கொடுக்கப்பட்டது. மக்கள் ஹஸ்ரத் பிலால் அவர்களுக்கு தண்டனை கொடுப்பதில் கடுமை காட்டும்போது, ஹஸ்ரத் பிலால் அவர்கள் அஹது,

அஹது என்று கூறுவார்கள். நாங்கள் கூறுவதைப் போன்று கூறு என்று அம்மக்கள் அவரிடம் கூறுவார்கள். அப்போது பிலால் அவர்கள் எனது நாவு நீங்கள் கூறுபவற்றை சரியாக உச்சரிக்க இயலாது என்று பதில் அளிப்பார்கள்.

இன்னோர் அறிவிப்பின் அடிப்படையில், ஹஸ்ரத் பிலால் அவர்களுக்கு துன்பம் கொடுக்கப்படும்போது, இணை வைப்பவர்கள் அவரை தம் பக்கம் சாய்த்து விட வேண்டும் என்று நாட்டம் கொள்வார்கள். ஆனால் பிலால் அவர்கள், அல்லாஹ்! அல்லாஹ்! என்றே கூறுவார்கள். (அத்தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅது பாகம் 3 பக்கம் 175 பிலால் பின் ரபாஹ் தாருல் அஹ்யாயித் தராஸ் பைரூத் 2017) (அஸதுல் காபா பாகம் 1 பக்கம் 283 பிலால் பின் ரபாஹ் தாருல் ஃபிக்ர் பைரூத் 2003)

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் பிலால் அவர்கள் நம்பிக்கை கொண்டபோது அவருடைய எஜமானர்கள் அவரைப் பிடித்து நிலத்தில் கிடத்தினார்கள். அவர் மீது கூழாங்கற்களையும், மாட்டின் தோலையும் போட்டார்கள். உன்னுடைய இறைவன் லாத் மற்றும் உஸ்ஸா ஆகும் என்றார்கள். ஆனால் அன்னாரோ அஹது, அஹது என்றே கூறினார்கள். அவருடைய எஜமானர்களிடத்தில் ஹஸ்ரத் அபூபக்ர்அவர்கள் வந்தார்கள். எப்பொழுது வரை நீங்கள் இந்த மனிதனுக்கு துன்பம் கொடுப்பீர்கள்? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள், பிலால் அவர்களை 7 ஊக்கியாவுக்கு விலைக்கு வாங்கி அவரை விடுதலை செய்தார்கள். ஓர் ஊக்கியா என்பது 40 திர்ஹம் ஆகும். அதாவது 280 திர்ஹமில் வாங்கினார்கள். பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் இந்த சம்பவத்தை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் எடுத்துரைத்தார்கள். அப்பொழுது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அபூபக்ரே! என்னையும் இதில் இணைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். அதற்கு அபூபக்ர் அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் அவரை விடுதலை செய்து விட்டேன் என்றார்கள். (அத்தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅது பாகம் 3 பக்கம் 175 பிலால் பின் ரபாஹ் தாருல் குதுபில் இல்மிய்யா பைரூத் 2017) ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள், ஹஸ்ரத் பிலால் அவர்களை விலைக்கு வாங்கி அல்லாஹ்வின் வழியில் அவரை விடுதலை செய்திருந்தார்கள். அந்த விலை குறித்து நான் ஏற்கனவே கூறியிருந்தது போன்று 280 திர்ஹமிற்கு அவர் வாங்கியிருந்தார். சில அறிவிப்புகளில் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் அவரை 5 ஊக்கியாவுக்கு அதாவது 200 திர்ஹமுக்கு வாங்கியதாகவும், சில அறிவிப்புகளில் 7 ஊக்கியாவுக்கு அதாவது 280 திர்ஹமுக்கு வாங்கியதாகவும், சில அறிவிப்புகளில் 9 ஊக்கியாவுக்கு அதாவது 360 திர்ஹமுக்கு வாங்கியதாகவும் கூறப்பட்டுள்ளது. (அஸதுல் காபா ஃபீ மஃரிஃபதிஸ் ஸஹாபா பாகம் 1 பக்கம் 415 பிலால் பின் ரபாஹ் தாருல் குதுபில் இல்மிய்யா பைரூத் லெபானன் 2016)

ஓர் அறிவிப்பில், அபூபக்ர் அவர்கள் பிலால் அவர்களை வாங்கிய போது, அவர் கற்களுக்குள் அமுங்கிக் கிடந்தார் என்று வருகிறது. ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் தங்கத்திலான ஐந்து ஊக்கியாவுக்கு மாற்றாக அவரை விலைக்கு வாங்கிக் கொண்டார்கள். மக்கள் அபூபக்ர் அவர்களைப் பார்த்து, நீங்கள் ஒரேயோர் ஊக்கியாவைக் கொடுக்க விருப்பப்பட்டிருந்தாலும், அதாவது 40 திர்ஹம் கொடுத்திருந்தாலும் நாங்கள் ஓர் ஊக்கியாவுக்கும் அவரை விற்றிருப்போம் என்றார்கள். இதைக் கேட்ட அபூபக்ர் (ரலி) அவர்கள், நீங்கள் இவரை 100 ஊக்கியாவுக்கு, அதாவது 4000 திர்ஹமுக்கு விற்பதாக இருந்திருந்தாலும் கூட நான் அவரை 100 ஊக்கியாவுக்கும் வாங்கியிருப்பேன் என்றார்கள். (ஸீரு அஃலாமின்னுப்லாயி லி இமாமதித்தஹபி பாகம் 1 பக்கம் 353 பிலால் பின் ரபாஹ் 2014)

ஹஸ்ரத் ஆயிஷா அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. அபூபக்ர் அவர்கள் துன்பமளிக்கப்பட்டு வந்த 7 அடிமைகளை விடுதலை செய்திருந்தார்கள். அவர்களில் ஹஸ்ரத் பிலால், ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபுஹைரா அவர்களும் அடங்குவார்கள். (அல் முஸ்தத்ரிக்கு அலஸ்ஸஹீன லில் ஹாகிம் திக்ரு பிலால் பின் ரபாஹ் பாகம் 3 பக்கம் 321 ஹதீஸ் 5241 தாருல் குதுபில் இல்மிய்யா பைரூத்) ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுவது என்னவென்றால், ஹஸ்ரத் உமர் அவர்கள், அபூபக்ர் நம்முடைய தலைவர் ஆவார். மேலும் அவர்கள் நம்முடைய தலைவரை விடுதலை செய்துள்ளார்கள் என்று கூறி வருவார்கள். அதாவது பிலால் அவர்களை விடுதலை செய்துள்ளார்கள் என்று கூறி வருவார்கள்.

(சஹீஹ் புகாரி கிதாபு ஃபஸாபிலி அஸ்ஹாபின் ரபிய்யி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பாபு முனாகிபி பிலால் பின் ரபாஹ் மவ்லா அபி பக்ர் ஹதீஸ் 3754)

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் பிலால் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட துன்பங்களைப் பற்றியும் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் அன்னாரை விடுதலை செய்த சம்பவத்தைப் பற்றியும் எடுத்துரைக்கும் போது கூறுகிறார்கள்:

“ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்ட இந்த அடிமைகள் பல்வேறு சமுதாயங்களைச் சார்ந்தவர் –களாக இருந்தார்கள். அவர்களில் அபிஸீனியர்களும் இருந்தார்கள்; உதாரணமாக பிலால் அவர்கள், ரோமானியர்களும் இருந்தார்கள்; உதாரணமாக ஜுபைர் மற்றும் சுஹைப் ஆகியோர். பிலால் அவர்களை அவருடைய எஜமானர்கள் கொதிக்கும் மணலில் கிடத்தி அவர்கள் மீது கல்லை வைத்து விடுவார்கள். அல்லது அவர்களுடைய நெஞ்சின் மீது இளைஞர்களைக் குதிப்பதற்காக நியமிப்பார்கள். அபிஸீனியா வம்சத்தைச் சார்ந்த பிலால் அவர்கள் உமைய்யா பின் கல்ஃப் என்ற பெயருடைய மக்கத்து தலைவனுடைய அடிமையாக இருந்தார்கள். பிலால் அவர்களை உமையா மதிய வேளையில், கோடைக் காலத்தில் மக்காவுக்கு வெளியே அழைத்துச் சென்று, கொதிக்கின்ற மணலின் நிர்வாணமாக கிடத்தி விடுவான். மேலும் கடும் கொதிக்கின்ற கற்களை அவர்களின் நெஞ்சின் மீது வைத்து விட்டு, லாத் மற்றும் உஸ்ஸா ஆகியவற்றை இறைவனாக ஏற்றுக் கொள்; முஹம்மது (ஸல்) அவர்களிடமிருந்து விலகிச் செல்வதாக அறிவித்து விடு என்பான். பிலால் அவர்கள் அதற்கு பதிலளிக்கும் விதமாக அஹது, அஹது என்று கூறுவார்கள். அன்னாருடைய இந்தப் பதிலை மீண்டும் மீண்டும் கேட்பதால் உமையா இன்னும் கோபம் கொள்வான். அவன் அன்னாருடைய கழுத்தில் கயிறைக் கட்டி, தீயவர்களுடைய கையில் அதை கொடுத்து விடுவான். இவரை மக்காவினுடைய தெருக்களில், கற்களின் மீது இழுத்துச் செல்லுங்கள் என்று கூறி விடுவான். அதன் காரணமாக அவருடைய உடல் இரத்தத்தால் நனைந்து விடும். ஆனால் அவ்வாறிருந்தும் அவர்கள் அஹது, அஹது என்று கூறிக் கொண்டே செல்வார்கள். அதாவது இறைவன் ஒருவனே! இறைவன் ஒருவனே! என்பதாகும்.

சில காலத்திற்குப் பிறகு இறைவன் முஸ்லிம்களுக்கு மதீனாவில் நிம்மதியை வழங்கியபோது, அவர்கள் சுதந்திரமாக இறைவணக்கம் செய்வதற்குத் தகுதியானவர்களாக ஆன போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிலால் அவர்களைப் பாங்கு கொடுப்பதற்காக நியமித்தார்கள். இந்த அபிஸீனிய அடிமை பாங்கில் அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறுவதற்குப் பதிலாக அஸ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறும்போது, அவருடைய நிலைமைகளைக் குறித்து அறியாத மதீனாவாசிகள் சிரிப்பார்கள். ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், பிலாலின் பாங்கோசையைக் கேட்டு அம்மக்கள் சிரிப்பதைக் கண்டு, அம்மக்களை திரும்பிப் பார்த்து, நீங்கள் பிலாலுடைய பாங்கைக் கேட்டு சிரிக்கிறீர்கள். ஆனால் அவருடைய பாங்கோசைக் கேட்டு இறைவன் அரியணையில் மகிழ்ச்சி அடைகிறான் என்று கூறினார்கள். அன்னார் சுட்டிக் காட்டிய விஷயம் என்னவென்றால், இவர் 'ஷீன்' என்று உச்சரிக்க முடியாததை நீங்கள் பார்க்கின்றீர்கள். ஆனால் 'ஷீன்' மற்றும் 'ஸீன்' என்ற உச்சரிப்பில் என்ன உள்ளது? கொதிக்கின்ற மணலில் வெறும் முதுகுடன் அவர் கிடத்தப்படுவார். அவருடைய நெஞ்சின் மீது அநீதியாளர்கள் தமது செருப்புடன் குதிப்பார்கள். இப்பொழுதாவது படிப்பினை பெற்றீரா? இல்லையா? என்று அவரிடம் கேட்கப்படும். அப்போது ஹஸ்ரத் பிலால் அவர்கள், தாம் மிகக் குறைவாக அறிந்த அந்த மொழியில் அஹது, அஹது என்று கூறி இறைவனுடைய ஏகத்துவத்திற்கான அறிவிப்பைச் செய்து கொண்டிருப்பார்கள். மேலும் தமது விசுவாசம், தமது ஏகத்துவத்திற்கான கொள்கை மற்றும் தமது உள்ளத்தின் உறுதிக்கான சான்றை கொடுப்பார்கள். ஆகவே அவருடைய அஸ்ஹது என்ற உச்சரிப்பு அநேக மக்களுடைய அஷ்ஹது என்ற எச்சரிப்பை விட மிக விலை மதிப்பானதாகும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பிலாலின் மீது அநீதி செய்யப்படுவதைக் கண்டு இவருடைய எஜமானனிடம் இருந்து இவருக்கான விலையைக் கொடுத்து இவரை விடுதலை செய்து விட்டார்கள். இவ்வாறு இன்னும் பல அடிமைகளையும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது செல்வத்தைக் கொண்டு விடுதலை செய்தார்கள். (தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன் அன்வாருல் உலூம் பாகம் 20 பக்கம் 193–194) ஹஸ்ரத்

பிலால் அவர்கள், முதன்மையானவர்களில் முன்னோடியாகக் கணக்கிடப்படுகிறார்கள். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாக அறிவிப்பு செய்த போது, அப்பொழுது ஏழு நபர்கள்தான் அவ்வாறு அறிவிப்பு செய்யும் நல்வாய்ப்பைப் பெற்றிருந்தார்கள். (அத்தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅதி பாகம் 3 பக்கம் 176 பிலால் பின் ரபாஹ். தாருல் குதுபில் இல்மிய்யா பைரூத் 2017)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது அவர்கள் அறிவிக்கிறார்கள்: ''முதன்முதலில் இஸ்லாத்தை ஏற்று அறிவிப்பு செய்தவர்கள் 7 நபர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அபூபக்ர், அம்மார் மற்றும் அவருடைய தாயார் சுமையா, சுஹைப், பிலால் மற்றும் மிக்தாது ஆகியோர் ஆவார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை அன்னாருடைய தந்தையினுடைய சகோதரர் அபூதாலிப் மூலமாக அல்லாஹ் பாதுகாத்து வந்தான்; மேலும் அபூபக்ர் அவர்களை அவருடைய சமுதாயத்தின் மூலமாக அல்லாஹ் பாதுகாத்திருந்தான்.''

நான் முந்தைய ஒரு குத்பாவில் ஏற்கனவே கூறியது போன்று, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கூட எதிரிகளுடைய துன்பங்களிலிருந்து பாதுகாப்பாக இல்லை. மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை கொடுமையிலிருந்து அவருடைய சமுதாயம் பாதுகாக்க இயலவில்லை. இந்த இருவரின் மீது வரம்பு மீறி அநீதி இழைக்கப்பட்டது. ஆரம்பத்தில் சிறிது காலம் வரை மென்மையாக நடந்து கொள்ளப்பட்டது. ஆனால் பிற்காலத்தில் பெரும் கடினங்கள் காட்டப்பட்டன. ஆனால் எப்படி இருந்தபோதிலும், இது அறிவிப்பாளர் உடைய கூற்றாகும்.

அறிவிப்பாளர் தொடர்ந்து கூறுகிறார்: இவர்களுக்கு சாதகமாகப் பேசுவார்கள்; இவர்களுக்குச் சாதகமாக குரல் எழுப்புவார்கள். ஆனால் பலவீனமானவர்களாகவோ அல்லது அடிமைகளாகவோ இருந்த மற்றவர்களை இணை வைப்பாளர்கள் பிடித்து வைத்திருந்தார்கள். அவர்களுக்கு இரும்பு உடைகள் அணிவிக்கப்பட்டன. மேலும் வெயிலில் அவர்கள் சுட்டெரிக்கப்பட்டார்கள். ஆனால் பிலால் அவர்களைத் தவிர அவர்களில் மற்ற எவருமே அந்த இணை வைப்பாளர்கள் விரும்பியதற்கு மாற்றமாக நடந்து கொண்டது கிடையாது. ஏனென்றால், பிலாலின் மீது அவரது ஆன்மா அல்லாஹ்வுக்காக விலை மதிப்பற்றதாக மாறிப்போனது. பிலால் அவர்கள் மட்டுமே எப்பொழுதும் உறுதியாக நிலை நின்றார்கள். அவர் தனது சமுதாயத்திற்காகவும் விலை மதிப்பற்றவராக இருந்தார்கள். அந்த இணை வைப்பாளர்கள் இவரைப் பிடித்துக் கொள்வார்கள்; மேலும் சிறுவர்களின் பொறுப்பில் விட்டு விடுவார்கள். அவர்கள் இவரை மக்காவினுடைய பள்ளத்தாக்குகளில் இழுத்துச் செல்வார்கள். ஆனால் பிலால் அவர்களோ அஹது, அஹது என்று கூறிக் கொண்டே இருப்பார்கள். இது இப்னு மாஜாவுடைய அறிவிப்பாகும். (சுனன் இப்னி மாஜா ஃபஸாயிலு பிலால் ஹதீஸ் 150 நூர் பவுண்டேஷன்)

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் பிலால் அவர்கள் ஆரம்ப காலத்தில் நம்பிக்கை கொண்ட சம்பவத்தைப் பற்றி எடுத்துரைக்கும்போது ஓரிடத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் கப்பாப் (ரலி) அவர்கள் முதன்மையானவர்களில் முன்னோடி சஹாபியாக இருக்கின்றார்கள். இவர்கள் முதலில் பைஅத் செய்தார்களோ அல்லது பிலால் முதலில் பைஅத் செய்தார்களோ என்பதில் கருத்து வேறுபாடு காணப்படுகிறது. ஏனென்றால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், ஓர் அடிமையும் ஒரு சுதந்திரமானவரும் முதன் முதலில் என்னை ஏற்றுக் கொண்டார்கள் என்று கூறியிருக்கிறார்கள். சிலர் அது ஹஸ்ரத் பிலால் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் ஆகியோர் ஆவார்கள் எனக் கூறுகிறார்கள். இன்னும் சிலரோ இது கப்பாப் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் ஆகியோரைக் குறிக்கும் என்று கூறுகிறார்கள்.

(மிஸ்ரி சாஹிப் கிலாஃபத்தை விட்டும் முகம் திருப்பியது பற்றிய சொற்பொழிவு அன்வாருல் உலூம் பாகம் 14 பக்கம் 598)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் என்பவர் உமைய்யா பின் கலஃப் என்பவனுடைய ஓர் அபிஸீனீய அடிமையாக இருந்தார்கள். உமைய்யா ஹஸ்ரத் பிலால் அவர்களை மதிய வேளையில் மேலிருந்து நெருப்பு சுட்டெரித்துக் கொண்டிருக்கும் போது, உலை போன்று கொதிக்கும் மக்காவினுடைய பாறை நிலப்பரப்பிற்கு அழைத்துச் செல்வான். நிர்வணமாக்கி அவரை நிலத்தில் கிடத்தி விடுவான். பெரும் பெரும் கொதிக்கின்ற கற்களை அவரது நெஞ்சின் மீது வைத்து, லாத் மற்றும் உஸ்ஸாவை வணங்கு; முஹம்மதை விட்டு விலகி விடு. இல்லையென்றால் இவ்வாறே துன்புறுத்திக் கொன்று விடுவேன் என்று கூறுவான். பிலால் அவர்களுக்கு அதிகமாக அரபி மொழி தெரியாது. அவர்கள் அஹது, அஹது என்று மட்டுமே கூறுவார்கள். அதாவது அல்லாஹ் ஒருவனே! அல்லாஹ் ஒருவனே! என்று கூறுவார்கள். இந்தப் பதிலைக் கேட்டு உமையா இன்னும் கோபமடைவான். அவருடைய கழுத்தில் கயிறைக் கட்டி தீய சிறுவர்களுடைய பொறுப்பில் அவரை விட்டு விடுவான். அவர்கள் அவரை கற்கள் நிறைந்த மக்காவினுடைய தெருக்களில் இழுத்துக் கொண்டு திரிவார்கள். அதன் காரணமாக அவருடைய உடல் இரத்தத்தால் நனைந்து விடும். ஆனால் அவருடைய நாவில் இருந்து அஹது, அஹது என்ற சொல்லைத் தவிர வேறு ஒன்றும் வெளிப்படாது. ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் இவர் மீது செய்யப்படுகின்ற கொடுமையைக் கண்டபோது, ஒரு பெரும் தொகை கொடுத்து இவரை விலைக்கு வாங்கி விடுதலை செய்து விட்டார்கள். (ஸீரத் காத்தமுன் நபிய்யீன் பக்கம் 140)

ஹஸ்ரத் பிலால் அவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனா வந்தபோது சஅது பின் கைஸ்மா என்பவருடைய வீட்டில் தங்கினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிலால் உடைய சகோதரத்துவத்தை ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் என்பவருடன் ஏற்படுத்தி இருந்தார்கள். ஆனால் இன்னோர் அறிவிப்பின் அடிப்படையில் அபூ ரவைஹா கைஸமீ அவர்களுடன் இவருடைய சகோதரத்துவத்தை ஏற்படுத்தி இருந்தார்கள் என்று வருகிறது. (அத்தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅது பாகம் 3 பக்கம் 176 பிலால் பின் ரபாஹ் தாருல் குதுபில் இல்மிய்யா பைரூத் 2017)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனா வந்தபோது சஹாபாக்கள் அங்கு நோயுற்றுப் போக ஆரம்பித்தார்கள். அவர்களுள் ஹஸ்ரத் அபூபக்ர், ஹஸ்ரத் பிலால், ஹஸ்ரத் ஆமிர் பின் ஃபுஹைரா ஆகியோரும் அடங்குவார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனா வந்தபோது அங்கு ஹஸ்ரத் அபூபக்ர், ஹஸ்ரத் பிலால் ஆகியோருக்கு காய்ச்சல் ஏற்பட்டது. ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களுக்கு காய்ச்சல் ஏற்படும்போது அவர்கள் இந்தக் கவிதையைப் படிப்பார்கள். அது அரபி கவிதையாகும். அதனுடைய மொழியாக்கம் என்னவென்றால், ''மரணம் தன்னுடைய செருப்பு வாரை விடச் சமீபத்தில் இருக்கும் நிலையில் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வீட்டில் காலை எழும்போது அவருக்கு காலைப்பொழுது நல்வாழ்த்து கூறப்படுகிறது.''

பிலால் (ரலி) அவர்களுக்கு காய்ச்சல் நீங்கியதும் வேதனைக் குரலை உயர்த்தி இந்தக் கவிதையைப் படிப்பார்கள். அதனுடைய மொழியாக்கம் என்னவென்றால், ''இத்கிர், ஜலீல் எனும் புற்கள் என்னைச் சூழ்ந்திருக்க, மக்காவின் ஒரு பள்ளத்தாக்கில் ஓர் இராப்பொழுதையேனும் நான் கழிப்பேனா? மஜின்னா சென்றடைந்து அதன் நீரை நான் அருந்துவேனா?''

மஜின்னா என்பதும் மக்காவுக்கு அருகில் சில மைல் தொலைவில் மர்ரு ஸுஹ்ரானுக்கு அருகிலுள்ள உள்ள ஓரிடத்தின் பெயர் ஆகும். அறியாமைக் காலத்தில் அரபு நாட்டினுடைய உக்காஸ் எனும் சந்தைக்குப் பிறகு மர்ரு ஸுஹ்ரான் எனும் இந்த இடத்தில் ஒரு பிரபல்யமான சந்தை நடத்தப்பட்டு வந்தது. அரபு மக்கள் உக்காஸுக்குப் பிறகு மர்ரு ஸுஹ்ரானுக்கு இடம்பெயர்ந்து விடுவார்கள். மேலும் 20 நாட்கள் வரை அங்கு தங்கியிருப்பார்கள். எப்படி இருந்தபோதிலும், பிலால் அவர்கள் கூறுகிறார்கள்:

**திருக்குர்ஆனிலிருந்து...**

அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்து நன்மை செய்பவராகி இப்ராஹீமின் நேரான மார்க்கத்தைப் பின்பற்றுகிறவரை விட அழகான மார்க்கத்தையுடையவர் யார்? அல்லாஹ் இப்ராஹீமைத் தன் நெருங்கிய நண்பராக ஆக்கிக் கொண்டான். (4:126)

S.S.H. MUHAMMED LEBBAI, Melapalayam

“நான் அங்கு நீர் அருந்துவேனா? ஷாமா மற்றும் தஃபீல் மலைகள் எனக்குத் தென்படுமா? என்ற கவிதையைக் கூறுவார்கள். தஃபீல் என்பதும் மக்காவிலிருந்து 10 மைல் தொலைவிலுள்ள ஒரு மலையின் பெயராகும். அதன் அருகில் இன்னொரு மலை ஒன்றும் இருந்தது. அதன் பெயர் ஷாமா என்பதாகும்.”

மேலும், பிலால் (ரலி) அவர்கள்,“அல்லாஹ்வே! ஷைபா பின் ரபீஆ, உத்பா பின் ரபீஆ, உமய்யா வின் கலஃப் ஆகியோர் எங்கள் நாட்டிலிருந்து எங்களை (அப்புறப்படுத்தி) இந்த நோய்ப் பிரதேசத்திற்கு விரட்டியது போல், அவர்களை நீ (உன் கருணையில் இருந்து அப்புறப்படுத்தி) சபித்து விடுவாயாக!” என்று கூறுவார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர், ஹஸ்ரத் பிலால் ஆகியோரின் இந்த விஷயங்களைக் கேட்ட ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், “அல்லாஹ்வே! நாங்கள் மக்காவை நேசித்தது போல் அல்லது அதை விட அதிகமான மதீனாவை எங்கள் நேசத்திற்குரியதாக ஆக்குவாயாக” அல்லாஹ்வே! எங்களுடைய ஸாவு, முத் ஆகியவற்றில் எங்களுக்கு நீ பரக்கத் செய்வாயாக! இந்த ஸாவு, முத் என்பது பிரபல்யமான அளவைகளின் பெயர்களாகும். எடை போட்டு பார்ப்பதற்கு உபயோகமாகின்றன. “மதீனாவை எங்களுக்கு ஆரோக்கியமானதாக ஆக்குவாயாக! இங்குள்ள காய்ச்சலை ஜுஹ்ஃபாவுக்கு இடம்பெயரச் செய்வாயாக!” என்று துஆ செய்தார்கள். ஜுஹ்ஃபா என்பதும் மக்காவின் திசையில் இருக்கக் கூடிய இன்னோர் ஊராகும்.

ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் கூறுகிறார்கள்: “நாங்கள் மதீனாவிற்கு வந்தபோது, அது அல்லாஹ்வின் பூமியிலேயே நோய் நொடிகள் அதிகமான பிரதேசமாக இருந்தது; புத்ஹான் எனும் சிறு ஓடையில் கொஞ்சம் நீர் ஓடிக் கொண்டிருந்தது. அந்த நீரும் நாற்றமடிக்கக் கூடியதாகவும், சுவையற்றதாகவும் இருந்தது.” புத்ஹான் என்பதும் மதீனாவின் அருகிலுள்ள ஒரு பள்ளத்தாக்கின் பெயராகும். இது புகாரியுடைய அறிவிப்பாகும். (சஹீஹ் புகாரி கிதாபு ஃபஸாயியில் மதீனா பாபு கராஹிதின் நபிய்யி (ஸல்) அன்துஃரில் மதீனா ஹதீஸ் 1889. ஃபர்ஹங்கே ஸீரத் பக்கம் 58, 180, 259 ஸவார் அகாடமி பப்ளிகேஷன்ஸ். ஹுமாயிலுன் நபி (ஸல்) பக்கம் 76 அடிக்குறிப்பு. ஷரஹ் ஸூக்கானி அலா மாவாஹிபில்லதுன்னியா பாகம் 2 பக்கம் 172 தாருல் குதுபில் இல்மிய்யா அச்சகம் பைரூத்)

காதியானிலிருந்து ஹிஜ்ரத் செய்யப்பட்டபோது அந்நேரத்தில் குறிப்பாக அஹ்மதிகளுக்கு, மதீனத்து ஹிஜ்ரத் தொடர்பாக அறிவுரை செய்தவாறு, நாம் இந்த ஹிஜ்ரத்தைக் கண்டு கவலை கொள்ளக் கூடாது. ஹஸ்ரத் பிலால் அவர்களுடைய இந்த சம்பவத்தை ஆதாரகமாக எடுத்துரைத்தவாறு, அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலை எடுத்துக் கூறியவாறு, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அந்நேரத்தில் ஜமாஅத்திற்கு கூறிய அறிவுரை என்னவென்றால்;

“நான் மற்றவர்களை அறிய மாட்டேன். ஹிஜ்ரத் செய்து வந்த அஹ்மதியல்லாத மற்ற முஸ்லிம்களிடத்தில் நான் இதைக் கூற முடியாது. ஆனால் அஹ்மதிகளிடம் இதை நான் கூறிக் கொள்கிறேன். நீங்கள் அபகரிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்ற எண்ணத்தையும், ஊரையும், சொத்தையும் இழந்துள்ளீர்கள் என்ற எண்ணத்தையும் நீங்கள் விட்டு விடுங்கள். நீங்கள் ஹிஜ்ரத் செய்திருக்கிறீர்கள். ஊரும், சொத்தும் விடுபட்டுப் போனதற்காக கவலைப்பட்ட முஹாஜிரீன்களைக் கண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருத்தமடைந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனா வந்தபோது, அப்போது அதனுடைய பெயர் யஸ்ரப் ஆக இருந்தது. அங்கு அதிகமான மலேரியா காய்ச்சல் இருந்தது. மலேரியா பரவியபோது முஹாஜிரீன்களுக்கு காய்ச்சல் வந்தது. ஒருபுறம் ஊரை விட்டுப் பிரிந்த கவலை இருந்தது. அவர்களில் சிலர், மக்காவே, மக்காவே என அழ ஆரம்பித்து விட்டனர்; ஒப்பாரி வைக்க ஆரம்பித்து விட்டனர். ஒருநாள் பிலால் அவர்களுக்கும் காய்ச்சல் வந்தது. அவர்கள் கவிதைகளைப் புனைந்தவாறு ஒப்பாரி வைக்க ஆரம்பித்து விட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இதைக் கண்டபோது அன்னார் கோபமடைந்தார்கள். இந்த வேலைக்காகவா நீங்கள் இங்கு வந்திருக்கிறீர்கள்? ஹிஜ்ரத் செய்திருக்கும்போது அதற்கு ஏன் ஒப்பாரி வைக்கிறீர்கள்? என்று கேட்டார்கள்.”

அந்நேரத்தில் இந்தியாவிலிருந்து ஹிஜ்ரத் செய்து பாகிஸ்தானுக்கு வந்த அஹ்மதிகளுக்கு அறிவுரை வழங்கியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

“நான் உங்களுக்கு இதையும் கூறிக் கொள்கிறேன். அதாவது, நீங்கள் மகிழ்ச்சியாக இருங்கள். நாம் என்ன இழந்தோம்? என்று பார்க்க வேண்டாம். மாறாக, நாம் யாருக்காக இழந்தோம் என்பதைத் தான் பார்க்க வேண்டும். நீங்கள் இழந்தது இறைவனுக்காகவும், இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்காகவும் இருக்கும் என்றால் நீங்கள் மகிழ்ச்சியாக இருங்கள். மேலும் எந்தவொரு தருணத்திலும் உங்களது இடுப்புகள் வளைந்துபோய் விட வேண்டாம். உங்களுடைய முகங்கள் வாடிப்போய் விட வேண்டாம். மாறாக அவற்றில் மகிழ்ச்சியின் அடையாளங்கள் தென்படட்டும்.” காதியானிலிருந்து எமது ஹிஜ்ரத் ஒரு இறை நியதியாகும் என்ற தலைப்பிலிருந்து எடுக்கப்பட்டது. அன்வாருல் உலூம் பாகம் 21 பக்கம் 379)

அஹ்மதிகளாகிய நாம் இந்த சிந்தனை கொண்டவர்களாக இருக்க வேண்டும். நம்முடைய ஹிஜ்ரத் அல்லாஹ்வுக்காகவும், இஸ்லாத்தின் தொண்டிற்காகவும் இருக்கின்றது என்று அப்போதைய கலீஃபா அவர்கள் நமக்கு அறிவுரையை வழங்கி இருக்கிறார்கள். பாகிஸ்தான் உருவாக்கப்பட்டதற்கு எதிராக இருந்தவர்கள், இன்று பாகிஸ்தானை உருவாக்கியதற்காகவும், தோற்றுவித்ததற்காகவும் வாதங்களைச் செய்து கொண்டு, தமது பொய் மற்றும் சூழ்ச்சியின் மூலமாக அஹ்மதிகளை அந்த நாட்டினுடைய அடிப்படை குடியுரிமையிலிருந்து விலக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நாட்டிற்காக அஹ்மதிகள் அதிகமான தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். எந்த மார்க்கத்தின் மேன்மைக்காகவும், கண்ணியத்திற்காகவும் நாம் ஹிஜ்ரத் செய்திருக்கின்றோமோ அந்த மார்க்கத்தின் பெயரைக் கூறுவதைக் கூட பாகிஸ்தானுடைய பாராளுமன்றம் தனது அரசியல் நோக்கத்திற்காக நம்மீது தடை செய்துள்ளது. எவ்வாறிருப்பினும், நமக்கு அவர்களுடைய சான்றிதழின் அவசியம் இல்லை. ஆனால் இந்தப் பெயர் தாங்கிய நாட்டின் குத்தகைக்காரர்கள் அஹ்மதிகளின் மீது அநீதியிழைத்தது மட்டுமல்லாமல் பாகிஸ்தானின் மீதும் அநீதியிழைத்துள்ளார்கள்; மேலும் அநீதியிழைத்துக் கொண்டே செல்கிறார்கள். உலகில் அந்நாட்டுக்கு அவப்பெயர் ஏற்படுவதற்குக் காரணமாகிக் கொண்டே செல்கிறார்கள். மேலும் அந்த நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கிறார்கள் என்பதைக் காணும்போது நமக்கு நிச்சயமாக வருத்தம் ஏற்படுகிறது. இவர்கள் மட்டும் இல்லாதிருப்பின் அந்த நாடு எப்போதோ முன்னேற்றமடைந்து எங்கோ சென்றடைந்திருக்கலாம். இவர்கள் நாட்டை தின்று கொண்டிருக்கிறார்கள்; கரையானைப் போன்று அரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவ்வாறிருந்தபோதிலும், பாகிஸ்தான் அஹ்மதிகளுடைய கடமை என்னவென்றால், குறிப்பாக பாகிஸ்தானில் வசிக்கக்கூடிய அஹ்மதிகள் அந்த நாட்டின் முன்னேற்றத்திற்காக தமது அனைத்து திறமைகளுடன் முயற்சி மேற்கொண்டு வர வேண்டும். அல்லாஹ் இந்த அநீதியாளர்களிடமிருந்து இந்த நாட்டைத் தூய்மைப்படுத்துமாறு துஆ செய்ய வேண்டும். எவ்வாறிருப்பினும், இந்த சம்பவம் வந்ததன் காரணமாக இத்துடன் தொடர்புடைய விஷயமும் கூறப்பட்டு விட்டது. இப்போது நான் மீண்டும் ஹஸ்ரத் பிலால் அவர்களைப் பற்றிய சம்பவங்களைக் கூறுகின்றேன்.

திப்காத்துல் குப்ரா என்ற நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது, ஹஸ்ரத் பிலால் அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் பத்ர், உஹது, அகழ் உட்பட மற்ற அனைத்துப் போர்களிலும்

## திருக்குர்ஆனிலிருந்து...

நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை ஏமாற்ற நினைக்கின்றனர். ஆனால் அவன் அவர்களுடைய ஏமாற்றுதலுக்கு தண்டனை அளிப்பான். அவர்கள் தொழுகைக்காக நிற்கும்போது சோம்பி நிற்கின்றனர். அவர்கள் மக்களுக்குக் காட்டு(வதற்காக தொழு)கின்றனர். மேலும் அல்லாஹ்வைக் குறைவாகவே நினைவு கூருகின்றனர். (4:143)

A. NASIR AHMAD, Melapalayam

கலந்து கொண்டுள்ளார்கள். (தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅது பாகம் 3 பக்கம் 120 பிலால் பின் ரவாஹ் தாருல் குதுவில் இல்மிய்யா பைரூத் 2017) பத்ர் போரில் ஹஸ்ரத் பிலால் அவர்கள் உமையா பின் கலஃப் என்பவனைக் கொன்றார்கள். அவன் இஸ்லாத்தின் மிகப்பெரும் எதிரியாக இருந்தான். ஹஸ்ரத் பிலால் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதன் காரணமாக அவர்களுக்கு துன்பமிழைத்து வந்தான். (ஸீருல் ஸஹாபா பாகம் 2 பக்கம் 156 பிலால் பின் ரபாஹ் உருது பாஸார் அச்சகம், கராச்சி 2004) உமையா பின் கலஃப் கொலை செய்யப்பட்ட சம்பவம் புகாரியில் கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் குபைப் பின் இஸாஃப் அவர்களைப் பற்றிய குறிப்பில் இதற்கு முன்பு நான் கூறியிருக்கிறேன். அதன் விபரத்தை இங்கேயும் கூறி விடுகிறேன். ஏனென்றால், பிலால் அவர்களுக்கு இதனுடன் நேரடியான தொடர்பும் உள்ளது.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் உமைய்யா பின் கலஃபிற்கு கடிதம் எழுதினேன். அதாவது, மக்காவிலுள்ள எனது செல்வம், சொத்துக்களை அவன் பாதுகாக்க வேண்டும் எனவும், அவனுடைய செல்வம், சொத்துக்களை மதீனாவில் நான் பாதுகாப்பேன் என்றும் கடிதம் எழுதியிருந்தேன். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களுக்கு அவனுடன் பழைய நட்பு இருந்தது. உமைய்யா பின் கலஃப் பத்ருப் போரில் கலந்து கொண்டான். நிராகரிப்பாளர்களின் படையில் வந்திருந்தான். இவன் பத்ர் போரில் கலந்து கொள்ள வந்திருந்ததை ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் அறிந்து கொண்டார்கள். பழைய நட்பின் காரணமாக அவன் மீது அனுதாபம் கொண்டு போருக்குப் பிறகு இரவு அவனை காப்பாற்றவும் விரும்பினார்கள்.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் கூறுகிறார்கள்: ''அவன் பத்ர் போர்க் களத்தில் இருந்தபோது, மக்களெல்லாம் உறங்கியவுடன் உமைய்யாவைப் பாதுகாப்பதற்காக மலையை நோக்கி நான் சென்றேன். ஏனென்றால் அவன் அப்பக்கமாக செல்வதைக் கண்டேன். அவனை பாதுகாத்து காப்பாற்றுவதற்காக நானும் அங்கு சென்றேன். அவனை பிலாலும் பார்த்து விட்டார்கள். பிலால் உடனே வந்து அன்ஸாரிகள் குழுமி இருந்த ஓரிடத்தை அடைந்து, இதோ உமைய்யா பின் கலஃப்! இவன் தப்பித்து விட்டால் எனக்கு நல்லதல்ல எனக் கூறினார். பிலாலுடன் அன்ஸாரிகளின் ஒரு கூட்டத்தினர் எங்களைத் தொடர்ந்து வந்தனர். அவர்கள் எங்களை அடைந்து விடுவார்கள் என்றும், பிடித்து விடுவார்கள் என்றும் நான் அஞ்சினேன். ஆகவே உமய்யாவுக்காக அவனது மகனை முன்னிறுத்தி அவர்களின் கவனத்தைத் திருப்ப முயன்றேன். அதாவது, அவர்கள் இவனுடன் சண்டையில் மூழ்கி இருக்கும்போது நாங்கள் முன் சென்று விடலாம் என்று நினைத்தேன். அவர்கள் உமைய்யாவின் மகனை சண்டையில் கொன்று விட்டனர். என்னுடைய திட்டம் பலிக்கவில்லை. அவர்கள் அவனைக் கொன்ற பிறகு எங்களைப் பின் தொடர ஆரம்பித்தனர். உமைய்யா கனத்த உடல் கொண்டவனாக இருந்ததால் உடனடியாக ஓடி ஒளிய முடியவில்லை. இறுதியில் அவர்கள் எங்களைப் பிடித்து விட்டார்கள். அவர்கள் எங்கள் அருகில் வந்ததும் உமைய்யாவிடம், உட்காருவீராக! என்று கூறினேன். அவன் உட்கார்ந்ததும் அவனைக் காப்பாற்றுவதற்காக அவன் மேல் நான் விழுந்தேன். எங்களைப் பின்தொடர்ந்து வந்தவர்கள், எனக்குக் கீழ்ப்புறம் வாளைச் செலுத்தி அவனைக் கொன்று விட்டனர். அவர்களில் ஒருவன் தனது வாளால் என் காலிலும் காயமேற்படுத்தினான்.'' (சஹீஹ் புகாரி கிதாபுல் வகாலத், ............... ஹதீஸ் 2301)

இன்னோர் அறிவிப்பில் இந்த சம்பவம் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. அதன் சில பகுதிகளை நான் எடுத்துரைக்கிறேன். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் கூறுகிறார்கள்:

''உமைய்யா மற்றும் அவனுடைய மகனை நான் அழைத்துக் கொண்டு செல்வதை ஹஸ்ரத் பிலால் அவர்கள் பார்த்து விட்டார்கள். இஸ்லாத்தை விட்டுவிட வேண்டும் என மக்காவில் பிலாலுக்கு உமைய்யா பெரும் துன்பங்கள் கொடுத்து வந்தான். ஆகவே உமைய்யாவை பிலால் அவர்கள் பார்த்தபோது, நிராகரிப்பாளர்களின் தலைவரான உமைய்யா இங்கு உள்ளான்; இவன் தப்பித்து விட்டால் நான் தப்பிக்க முடியாது என்று சப்தமிட்டார். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அஃவ்ப் அவர்கள் கூறுகிறார்கள். நான் பிலாலைப் பார்த்து, பிலாலே! நீங்கள் எனது கைதிகளைக் குறித்தா கூறுகிறீர்கள் எனக் கேட்டேன். பிலால் அவர்கள், மீண்டும் மீண்டும் இதனையே கூறினார்கள். நானும் ஒவ்வொரு முறையும் இவர்கள் எனது கைதிகள் என்று கூறினேன். பிறகு பிலால் மிக உரத்த குரலில், அல்லாஹ்வின் அன்ஸாரிகளே! காஃபிர்களின் தலைவன் உமைய்யா பின் கலஃப் இவன்தான், இவன் தப்பித்து விட்டால் நாம் தப்பிக்க முடியாது என்று கூறினார்கள். பலமுறை இதை கூறினார்கள். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் கூறுகிறார்கள். அவருடைய குரலைக் கேட்டு அன்ஸாரிகள் ஓடி வந்தனர். அவர்கள் நாலாபுறமும் எங்களைச் சுற்றி வளைத்து விட்டார்கள். பிறகு ஹஸ்ரத் பிலால் அவர்கள் வாளேந்தி உமைய்யாவின் மகனின் மீது தாக்குதல் தொடுத்தார்கள். அதன் காரணமாக அவன் கீழே விழுந்து விட்டான். அப்போது உமைய்யா அச்சத்தின் காரணமாக எந்த அளவு பயங்கரமாக அலறினான் என்றால், அதுபோன்ற ஓலத்தை நான் ஒருபோதும் கேட்டதில்லை. அப்பொழுது அன்ஸாரிகள் அவ்விருவரையும் வாள் கொண்டு வெட்டி வீசினார்கள். (அஸ்ஸீரதுல் ஹல்பிய்யா பாகம் 2 பக்கம் 232–233 பாபு திக்ரி மகாஸியா (ஸல்). கஸ்வது பத்ரில் குப்ரா. தாருல் குதுபில் இல்மிய்யா பைரூத்)

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது: ஹஸ்ரத் பிலால் அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய செயலாளராகவோ அல்லது பொருளாளராகவோ இருந்தார்கள். (அஸதுல் காபா ஃபி மஃரிஃபத்ஸ் ஸஹாபா பாகம் 1 பக்கம் 455 பிலால் பின் ரபாஹ் தாருல் குதுபில் இல்மிய்யா பைரூத் 2016) ஒருவர் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களிடம், தாங்களும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் ஏதேனும் பயணத்தில் இருந்திருக்–கிறீர்களா? என்று கேட்டார். அதற்கு இப்னு அப்பாஸ் அவர்கள், அன்னாருடன் எனக்கு (உறவின் காரணமாக) நெருக்கம் இல்லாதிருந்–திருப்பின் நான் பயணத்தில் உடன் இருந்திருக்க முடியாது என்று கூறினார்கள். அதாவது, சிறுவனாக இருந்த காரணத்தினால் அவர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. உறவினராகவும் இருந்தார். ஆகவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் பயணத்தில் இருந்துள்ளார்கள்.

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் மேலும் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கஸீர் பின் ஸல்த் அவர்களின் வீட்டருகில் உள்ள அடையாளத்திற்கு அருகே வந்தார்கள். பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சஹாபாக்களிடத்தில் சொற்பொழிவாற்றினார்கள். பிறகு பெண்களிடம் தான தருமங்கள் செய்யுமாறு கூறினார்கள். உடனே பெண்கள் தாம் அணிந்திருந்த மோதிரங்களைக் கழற்றி ஹஸ்ரத் பிலால் அவர்களின் துணியில் போட்டுக் கொண்டே சென்றார்கள். பிலால் அவர்கள், உடன் இருந்தார்கள். அவர்களிடமுள்ள போர்வையில் பெண்கள் போட்டுக் கொண்டே சென்றார்கள். இந்த அறிவிப்பை ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் அறிவிக்கிறார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும், ஹஸ்ரத் பிலால் அவர்களும் வீட்டிற்குத் திரும்பிச் சென்றார்கள். (சஹீஹ் புகாரி கிதாபுல் அதான் பாபு வஹுயிஸ் ஸிப்பிய்யானி வ மதா யஜிப அலைஹி மில் குஸ்ல் ஹதீஸ் 863)

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்னிடம் கூறினார்கள்: அல்லாஹ்வுக்காக எனக்கு எந்த அளவு துன்பம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால், எவருக்கும் இதுபோன்று துன்பம் கொடுக்கப்பட முடியாது. அல்லாஹ்வுக்காக நான் எந்த அளவு பயமுறுத்தப்பட்டுள்ளேன் என்றால் இந்த அளவு எவரும் பயமுறுத்தப்படவில்லை. எனக்கும் பிலாலுக்கும்

**திருக்குர்ஆனிலிருந்து...**

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நம்பிக்கை கொண்டவர்களை விட்டு விட்டு, நிராகரிப்பாளர்களை (உங்களுடைய) நண்பர்களாக்கிக் கொள்ளாதீர்கள். நீங்கள் உங்களுக்கு எதிராக மிகத் தெளிவான குற்றச்சாட்டி(னைச் சுமத்துவத)ற்குரிய வாய்ப்பை இறைவனுக்குக் கொடுக்க விரும்புகின்றீர்களா? (4:145)

M. SABAHUL ISLAM & A. MOHAIDEEN ALI, Melapalayam

உணவு இல்லாத மூன்று இரவுகள் வந்துள்ளன. பிலாலுடைய அக்குளில் ஒளித்து வைக்கும் அளவிலான, எந்த ஒரு உயிரினமும் உண்ண முடியாத அளவிலான உணவு மட்டுமே இருக்கும். அதாவது, மிக மிக குறைவான அளவில் மட்டுமே உணவு இருக்கும். (சுனன் இப்னி மாஜா அப்வாபுல் மனாகிப் பாபு ஃபஸாயிலி பிலால் (ரலி) ஹதீஸ் 151 நூர் பவுண்டேஷனின் மொழியாக்கம்)

ஹஸ்ரத் பிலால் அவர்களுக்கு முதன் முறையாக பாங்கு கூறக் கூடிய வாய்ப்பு கிடைத்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய முழு வாழ்விலும், பயணம் மற்றும் பயணமல்லாத தருணங்களில், அன்னாரின் முஅத்தின் (பாங்கு சொல்லக் கூடியவர்) ஆக ஹஸ்ரத் பிலால் இருந்திருக்கிறார்கள். இஸ்லாத்தில் முதன் முறையாக பாங்கு கூறியவர் இவரே ஆவார்.

(அஸதுல் காபா ஃபி மஃரிஃபத்ஸ் ஸஹாபா பாகம் 1 பக்கம் 416 பிலால் பின் ரபாஹ் தாருல் குதுபில் இல்மிய்யா பைரூத் 2016)

முஹம்மது பின் அப்துல்லாஹ் பின் ஸைது அவர்கள் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், தொழுகைக்கு மக்களை அழைப்பதற்காக கொம்பு ஊதலாமா அல்லது முரசு கொட்டலாமா என்று ஆலோசனை செய்தார்கள். புகாரியில் இந்த ஹதீஸ் வருகிறது. சஹாபாக்கள் ஊது கொம்பு அல்லது சங்கு ஊதலாம் என ஆலோசனை வழங்கினார்கள். பிறகு அப்துல்லாஹ் பின் ஸைது அவர்களுக்கு கனவில் காட்டப்பட்டது. அவர்கள் கூறுகிறார்கள். நான் கனவில் ஒரு மனிதனைக் கண்டேன். அவர் இரண்டு பச்சை நிற உடைகளை அணிந்திருந்தார். அவரது கையில் கைக்கொட்டு ஒன்றை வைத்திருந்தார். நான் கனவில் அவரிடம், அல்லாஹ்வின் அடியாரே! அந்த கைக்கொட்டை எனக்கு விலைக்கு தருவீர்களா? என்று கேட்டேன். அதற்கு அவர், இதனைக் கொண்டு என்ன செய்வீர்கள்? என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான், இதன் மூலமாக தொழுகைக்கு அழைப்பேன் என்று கூறினேன். அதற்கு அந்த மனிதர், இதை விட சிறந்ததை உங்களுக்கு நான் கூறட்டுமா? என்று கேட்டார். அதற்கு நான், அது என்ன என்று கேட்டேன். அவர் பாங்கின் வாசகங்களை எனக்கு கூறினார். அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் என்று முழு பாங்கையும் கூறினார். அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹ்; அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹ், அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ்; அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ். ஹய்ய அலஸ் ஸலாஹ்; ஹய்ய அலஸ் ஸலாஹ். ஹய்ய அலஸ் ஃபலாஹ்; ஹய்ய அலஸ் ஃபலாஹ். அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர். லாயிலாஹ இல்லல்லாஹ்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: பிறகு அப்துல்லாஹ் பின் ஸைது அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, தாம் கனவில் கண்ட அனைத்து விஷயங்களையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் எடுத்துரைத்தார்கள். அதாவது, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் கனவில் ஒரு மனிதரைக் கண்டேன். அவர் இரண்டு பச்சை உடைகளை அணிந்திருந்தார். அவரிடத்தில் கைக்கொட்டு இருந்தது. இவ்வாறு அனைத்து விஷயங்களையும் எடுத்துரைத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபாக்களிடம், உங்களுடைய நண்பர் கனவு கண்டுள்ளார் என்று கூறினார்கள். பிறகு அப்துல்லாஹ் பின் ஸைது அவர்களிடம், நீங்கள் பிலாலுடன் பள்ளிவாசலுக்குச் செல்லுங்கள். அவருக்கு இந்த சொற்களை கூறிக் கொண்டே செல்லுங்கள். அவர் இதை உரத்த குரலில் கூறுவார். ஏனென்றால், அவர் உங்களை விட உரத்த குரல் உடையவர் என்றார்கள். அப்துல்லாஹ் பின் ஸைது அவர்கள் கூறுகிறார்கள். நான் பிலாலுடன் பள்ளிவாயிலுக்குச் சென்றேன். நான் அந்த சொற்களைக் கூறிக் கொண்டே சென்றேன்; அவர் உரத்த குரலில் அதை கூறிக் கொண்டே வந்தார். ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் அவர்களுக்கு இந்தக் குரல் கேட்டபோது, அவர் வெளியேறி வந்தார். அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம், இறைவன் மீது ஆணையாக! இவர் கனவில் கண்ட அதையேதான் நானும் கனவில் கண்டேன் என்று கூறினார்கள்.

(சுனன் இப்னி மாஜா கிதாபுல் அதான் பாபு பதஇல் அதான் ஹதீஸ் 706. சஹீஹ் புகாரி கிதாபுல் அதான் பாபு பதஇல் அதான் ஹதீஸ் 604)

இதைப் பற்றி கூறியவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள்:

“அப்பொழுது வரை தொழுகைக்கு அழைப்பதற்கு அறிவிப்போ அல்லது பாங்கு போன்றவற்றின் ஏற்பாடோ இருக்கவில்லை. சஹாபாக்கள் பொதுவாக தொழுகைக்கு வரக்கூடிய நேரத்தைக் கருத்தில் கொண்டு அவர்களே தொழுகைக்காக ஒன்று கூடி விடுவார்கள். ஆனால் இது நிம்மதி அளிக்கக் கூடியதாக இருக்கவில்லை. இப்பொழுது நபவி பள்ளிவாசல் ஆயத்தமான பிறகு, முஸ்லிம்களை எவ்வாறு குறித்த நேரத்தில் ஒன்று திரட்டலாம் என்ற கேள்வி அதிகமாக தோன்றியது. கிறிஸ்தவர்களைப் போன்று மணியோசை எழுப்பலாம் என ஒரு சஹாபி ஆலோசனை கூறினார். வொறாருவரோ யூதர்களைப் போன்று குழலூதலாமே என ஆலோசனை கூறினார். வேறொருவர் இன்னொரு ஆலோசனையைக் கூறினார். அப்பொழுது ஹஸ்ரத் உமர் அவர்கள், தொழுகைக்கான நேரம் வரும்போது அது குறித்து அறிவிக்க ஒருவரை நியமிக்கலாமே என ஆலோசனை வழங்கினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த ஆலோசனை பிடித்திருந்தது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் பிலால் அவர்களிடம் இந்தக் கடமையை நிறைவேற்றி வருமாறு கட்டளையிட்டார்கள். ஆகவே அதன் பிறகு தொழுகைக்கான நேரம் வரும்போது பிலால் அவர்கள் உரத்த குரலில் அஸ்ஸலாத்துல் ஜாமிஆ – தொழுகைக்காக ஒன்று கூடுங்கள் என்று அழைப்பார்கள். மக்கள் ஒன்று கூடி விடுவார்கள். தொழுகைக்கு மட்டுமின்றி வேறு ஏதேனும் நோக்கத்திற்காக முஸ்லிம்களை பள்ளிவாசலில் ஒன்று கூட்டுவது நோக்கமாக இருக்கும் என்றாலும், இதே அழைப்புதான் கொடுக்கப்பட்டது. இதன் பிறகு கொஞ்ச காலத்திற்குப் பிறகு, ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸைது அன்ஸாரி என்ற ஒரு சஹாபிக்கு கனவில் தற்போதைய பாங்கின் சொற்கள் கற்பிக்கப்பட்டன. அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்து தமது கனவைக் கூறினார்கள். கனவில் ஒரு மனிதன் இந்த சொற்களைக் கூறி, இந்த வழிமுறையில் பாங்கு கூறுவதைக் கேட்டேன் என்று சொன்னார்கள். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், இந்தக் கனவு இறைவன் புறமிருந்து வந்துள்ளது என்று கூறினார்கள். மேலும் அப்துல்லாஹ் அவர்களிடம், இந்த சொற்களை பிலாலுக்குக் கற்றுக் கொடுங்கள் என்று கட்டளை இட்டார்கள். இதில் ஆச்சரியமான ஒற்றுமை என்னவென்றால், பிலால் அவர்கள் இந்த சொற்களைக் கூறி முதன் முறையாக பாங்கு கொடுத்தபோது, ஹஸ்ரத் உமர் அவர்கள் அதைக் கேட்டு விட்டு விரைவாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் ஆஜரானார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இன்று பிலால் எந்த சொற்களைக் கூறி பாங்கு கொடுத்தாரோ அதே சொற்களை நானும் கனவில் கண்டேன் என்று கூறினார்கள்.

இன்னோர் அறிவிப்பில் எவ்வாறு வருகிறது என்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பாங்கின் சொற்களைக் கேட்டபோது, இதற்கேற்ப இறை அறிவிப்பும் வந்துள்ளது என்று கூறினார்கள். சுருக்கம் என்னவென்றால், இவ்வாறு தற்போதைய பாங்கினுடைய வழிமுறை ஆரம்பித்தது. ஆரம்பிக்கப்பட்ட இந்த வழிமுறை எந்த அளவுக்கு அருளுக்குரியதாகவும், உள்ளத்தை ஈர்க்கக் கூடியதாகவும் இருக்கிறது என்றால் வேறு எந்த வழிமுறையும் இதனுடன் போட்டியிட முடியாது. ஒவ்வொரு நாளும் ஐவேளையில், இஸ்லாமிய உலகின் ஒவ்வொரு நகரத்திலும், கிராமத்திலும், ஒவ்வொரு பள்ளிவாசலிலிருந்து இறைவனுடைய ஏகத்துவம் மற்றும் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய தூதுத்துவத்தின் குரல் ஓங்கிக் கொண்டிருக்கின்றது. மேலும் இஸ்லாமிய போதனைகளின் சாராம்சம் மிக அழகிய முறையில், சுருக்கமான சொற்களின் மூலமாக மக்கள் வரை சென்றடைய வைக்கப்படுகின்றது. (ஸீரத் காத்தமுன் நபிய்யீன் பக்கம் 271, 272)

மூஸா பின் முஹம்மது தனது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் பிலால் அவர்கள் பாங்கு கொடுத்த பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு தகவல் கொடுக்க விரும்பினால், அன்னாருடைய வீட்டு வாசலில் நின்று கொண்டு, ஹய்ய அலஸ் ஸலாஹ்; ஹய்ய அலல் ஃபலாஹ்; அஸ்ஸலாத்து யா ரஸூலல்லாஹ் என்று கூறுவார்கள். அதாவது தொழுகைக்கு வாருங்கள்; வெற்றிக்காக வாருங்கள்; இறைத் தூதரே! தொழுகைக்காக வாருங்கள் என்பதாகும். தொழுகைக்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளியேறுவதை பிலால் அவர்கள் காணும்போது, அவர்கள் இ(க்)காமத் கொடுக்கத் தொடங்கி விடுவார்கள்.” (அத்தபகாதுல் குப்ரா லி இப்னி ஸஅது பாகம் 3 பக்கம் 176,177 பிலால் பின் ரபாஹ் தாருல் குதுபில் இல்மிய்யா பைரூத் 2017)

இந்த விஷயம் தெளிவாக இல்லை. இ(க்)காமத் என்பது இமாம் தொழுகைக்காக தொழும் இடத்தில் நிற்கும்போது கூறப்படுகிறது. எவ்வாறிருப்பினும், அறிவிப்பின் உடைய சரியான மொழியாக்கமாக இது இல்லை அல்லது சரியான அறிவிப்பாக இல்லை. ஆனால் உண்மையான வழிமுறை என்னவென்றால், தொழும் இடத்திற்கு இமாம் வந்து விட வேண்டும். பிறகு இ(க்)காமத் கூறப்பட வேண்டும்.

சுனன் இப்னு மாஜாவில் ஹஸ்ரத் பிலால் அவர்களிடமிருந்து ஓர் அறிவிப்பு அறிவிக்கப்படுகிறது. ஃபஜ்ர் தொழுகைக்கு தகவல் கொடுப்பதற்காக பிலால் அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடத்தில் ஒருமுறை ஆஜராகும்போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று அவரிடம் கூறப்பட்டது. அப்போது பிலால் அவர்கள், அஸ்ஸலாத்து கைரும் மினன் நவ்ம், அஸ்ஸலாத்து கைரும் மினன் நவ்ம் என்று கூறினார்கள். பிறகு ஃபஜ்ருடைய பாங்கில் இந்த சொற்களும் இணைத்துக் கொள்ளப்பட்டது. மேலும் இந்த வழிமுறை நிலைபெற்று விட்டது. (சுனன் இப்னி மாஜா கிதாபுல் அதான் பாபு அஸ்ஸனத்தி ஃபில் அதான் ஹதீஸ் 716)

இன்னோர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், பிலாலே! இது எத்துணை அழகான சொற்களாக இருக்கின்றன! நீங்கள் உங்களது ஃபஜ்ர் பாங்கில் இதை இணைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

(முஃஜிமுல் கபீர் லித்தப்ரானி பாபு பிலாலுப்னு ரபாஹ் பாகம் 1 பக்கம் 355 ஹதீஸ் 1081 தாருல் அஹ்யாயித் தராஸ் அல் அரபி 2002)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு மூன்று முஅத்தின் (பாங்கு சொல்லக் கூடியவர்) இருந்தார்கள். ஹஸ்ரத் பிலால், அபூ மஹ்ஃதூரா, அம்ர் பின் இப்னு மக்தூம் ஆகியோர்.

(அத்தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅது பாகம் 3 பக்கம் 177 பிலால் பின் ரபாஹ் தாருல் குதுபில் இல்மிய்யா பைரூத் 2017)

ஹஸ்ரத் பிலால் அவர்களைப் பற்றிய குறிப்பு இன்னும் கொஞ்சம் எஞ்சியுள்ளது. இனிவரும் காலத்தில் அது கூறப்படும் – இன்ஷா அல்லாஹ். இப்பொழுது நான் சில மர்ஹூம்களுடைய ஜனாஸாக்களைப் பற்றி எடுத்துரைப்பேன். அவர்களின் ஜனாஸா தொழுகையும் நடைபெறும். ஆகவே இவர்களைப் பற்றிய மீதமுள்ள குறிப்பை இனி வரக்கூடிய காலத்தில் எடுத்துரைப்பேன் – இன்ஷா அல்லாஹ்.

***முதலாவது ஜனாஸா, அன்பிற்குரிய ரவூஃப் பின் மக்சூது ஜூனியர் பெல்ஜியம்*** அவர்களுடையதாகும். இவர் ஜாமிஆ அஹ்மதிய்யா யூ.கே உடைய மாணவராக இருந்தார். செப்டம்பர் 4 ஆம் தேதி இவர் மரணமடைந்தார். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.

இவர் பெல்ஜியத்தில் ஹாஸல்ட் என்ற ஜமாஅத்துடன் தொடர்புடையவர் ஆவார். 2018 ஆம் ஆண்டு ஜாமிஆவில் இணைந்தார். தமது மேல்நிலைப் பள்ளிப் படிப்பை நிறைவு செய்து இங்கு வந்திருந்தார். இவர் தனது கலப்பற்ற இயல்பு, படைப்பினங்களுக்கு தொண்டு செய்யும் ஆர்வம், கடும் உழைப்பின் காரணமாக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கிடையில் மிகவும் விருப்பத்திற்குரியவராக இருந்தார். சிறிது காலத்திற்கு முன்பு இவருக்கு Brain Tumour (மூளைக் கட்டி நோய்) ஏற்பட்டது. ஆறு, ஏழு மாதங்கள் இவர் நோய்வாய்ப்பட்டிருந்தார். மிகவும் பொறுமை மற்றும் தீரத்துடன் நோயை எதிர்கொண்டார். இறுதியில் அல்லாஹ்வின் நேசத்திற்குரியவராக ஆகி விட்டார்.

இவருடைய பாட்டனாரின் மூலமாக இவருடைய குடும்பத்தில் அஹ்மதிய்யத் வந்தது. ஏறக்குறைய 1950 ஆம் ஆண்டில், இவருடைய பாட்டனாருக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. அப்பொழுது உறவினர்களும், எதிரிகளும் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் அவருடைய மரணத்திற்குப் பிறகு குடும்பத்திற்கு கடும் எதிர்ப்பைச் சந்திக்க நேரிட்டது. மர்ஹூமுடைய தாய்வழி முப்பாட்டனார் அப்துல் அலி சாஹிப் அவர்களும், அவருடைய மனைவியும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவருடைய கையில் பைஅத் செய்திருந்தார்கள். மர்ஹூம் ரவூஃப் பின் மக்சூது அவர்கள் தமது பெற்றோர்களைத் தவிர மூன்று சகோதரிகள் மற்றும் இரண்டு சகோதரர்களை விட்டுச் சென்றிருக்கிறார்கள். ஹுமாயூன் மக்சூது சாஹிப் தந்தையாவார். முஹ்சினா பேகம் சாஹிபா தாயார் ஆவார்கள். நிஷாத் இந்த தம்பதியின் மகள் ஆவார். வயது 18. ஸாலிஹ் என்பவர் மகன் ஆவார். வயது 14. தஸ்னியா உனைஸாவுக்கு 9 வயது. ஃபாத்திஹ் மக்சூது 7 வயது. ஜன்னத்துஸ் ஸாமிஆ 4 வயது.

பெல்ஜியத்தின் அமீர் சாஹிப் எழுதுகிறார்கள்: மர்ஹூமை குழந்தைப் பருவத்திலிருந்தே பார்க்கக்கூடிய வாய்ப்பு எனக்கு கிடைத்துள்ளது. அசாதாரணமான குழந்தையாக இவரை நான் கண்டுள்ளேன். எப்பொழுதெல்லாம் இவருடைய ஜமாஅத்திற்கு செல்லக்கூடிய வாய்ப்பு கிடைத்ததோ அப்போதெல்லாம் இவரை பள்ளிவாசலுடன் தொடர்புடையவராகவும், நற்பண்புகளுக்குச் சொந்தக்காரராகவும் கண்டுள்ளேன். இவருடைய மரணத்திற்குப் பிறகு துக்கம் விசாரிக்க மக்கள் வந்து செல்ல ஆல்கன் பைத்துர் ரஹீமில் இரண்டு நாட்கள் வரை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஜமாஅத்திலிருந்து பெரும் திரளாக மக்கள் அதில் கலந்து கொண்டார்கள்.

அதில் பல பேர் அழுவதை அவர்கள் கண்டுள்ளார்கள். அவர்கள் அனைவரும் மர்ஹூமைப் பற்றி எண்ணற்ற சம்பவங்களை எடுத்துரைத்தார்கள். நோயின் ஆரம்பத்திலேயே மருத்துவர்கள் அவரிடத்தில், மூளைப் புற்று நோய் (Brain Cancer) ஏற்பட்டுள்ளது; இது வாழ்க்கைக்கு மிகவும் ஆபத்தானதாக ஆவதற்கு வாய்ப்புள்ளது என்று கூறிவிட்டார்கள். ஆயினும் அதன் பிறகும் கூட அவருடைய முகத்தில் ஒருபோதும் சோகம் தென்படவில்லை; ஒருபோதும் தைரியத்தை இழந்து விடவில்லை. மருத்துவருடன் மீட்டிங் நடக்கும் போது ஒரு மருத்துவர் இவ்வாறு கூறியுள்ளார். அதாவது, அவர் பேசக்கூடிய நிலையில் இருக்கும் வரை அவருடன் நான் பேசி இருக்கின்றேன். நான் அவரை அசாதாரணமான இளைஞனாகவும், பிரகாசமான புத்தியுடையவராகவும் கண்டுள்ளேன். மேலும், மருத்துவர்கள் இன்னொரு விஷயத்தையும் கூறியுள்ளார்கள். அது என்னவென்றால், மிகவும் வேதனையான நோயின் நிலையிலும் கூட அவர் ஒருபோதும் எரிச்சல் அடையவில்லை என்பதையும் கூறி இருக்கிறார்கள். மருத்துவர்களைப் பொருத்தவரையில் இதுபோன்ற நிலையில் நோயாளிக்கு சில நேரத்தில் கடும் கோபம் ஏற்பட்டு விடும். ஆனால் இவர் மிகவும் தைரியத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்; பொறுமையை மேற்கொண்டுள்ளார்.

அமீர் சாஹிப் அவர்கள் தொடர்ந்து எழுதுகிறார்கள்: மர்ஹூம் கிலாஃபத்துடன் மிக உயரிய நேசத்தை கொண்டிருந்தார்கள். முழுமையாக கட்டுப்படக் கூடியவர்களாகத் திகழ்ந்தார்கள். எப்பொழுதுமே முகத்தில் புன்சிரிப்பு இருக்கும். எல்லாரிடமும் அவர் கண்ணியத்துடனும், மலர்ந்த முகத்துடனும் பேசுவார்கள். அவர்கள் சிறியவராக இருந்தாலும் சரியே! அல்லது பெரியவராக இருந்தாலும் சரியே!

ஹாஸலின் முரப்பி சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள்: நோய் கண்டறியப்படுவதற்கு முன்பாக ரமலானில் நான் மர்ஹூமிடம் அத்ஃபாலுக்கு ஆன்லைன் வகுப்பு எடுக்குமாறு கூறியிருந்தேன். மர்ஹூம் அவர்கள் மிகவும் தொடர்ச்சியாகவகுப்பு எடுத்து வந்தார்கள். எதுவரையென்றால், இந்த நோயின் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது, நோய்வாய்ப்பட்டும் கூட மருத்துவமனையில் இருந்து குழந்தைகளுக்கு வகுப்பு எடுத்து வந்தார்கள். சில வேளைகளில் வகுப்பு நடத்திக் கொண்டிருக்கும் போது மயக்க நிலை ஏற்பட்டு விடும். பிறகு உடல்நிலை தேறியதும் மறுபடியும் வகுப்பு எடுக்க ஆரம்பித்து விடுவார்கள். நான் துன்பத்தில் இருக்கிறேன்; என்னால் வகுப்பு எடுக்க முடியாது என்று ஒருபோதும் கூறியது கிடையாது. உங்களுக்கு கஷ்டமாக

## திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக நயவஞ்சகர்கள் நரக ஆழத்தின் அடிமட்டத்தில் இருப்பர். அவர்களுக்கு உதவி செய்பவராக (எவரையும்) நீர் ஒருபோதும் காண மாட்டீர். (4:146)

A. BASHEER AHMAD, Melapalayam

இருந்தால் நீங்கள் வகுப்பு எடுக்க வேண்டாம் என்று சிறுவர்களும் இந்த விஷயத்தை கூறியிருக்கிறார்கள். இதற்கு மர்ஹூம் அவர்கள் எப்போதும் கூறிய பதில் என்னவென்றால், ஜாமிஆ திறந்தவுடன் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடத்தில் சென்று, விடுமுறை நாட்களில் நான் என்ன ஜமாஅத் தொண்டு செய்தேன் என்று எதைக் கூறுவேன்? என்று கேட்டுள்ளார்கள். அவரிடத்தில் ஓர் ஆர்வமும் உணர்வும் ஈடுபாடும் இருந்தது.

பிறகு இன்னொரு முரப்பி சாஹிப் எழுதுகிறார்கள்: 2010 ஆம் ஆண்டில் மர்ஹூம் அவர்கள் ஒரு வாரத்திற்கு வக்ஃபே ஆர்ஸி – தற்காலிக அர்ப்பணிப்பு செய்திருந்தார்கள். அந்நேரத்தில் அவருடைய தந்தை, இவர் இங்கு இருப்பார். ஏனென்றால், இவர் ஜாமிஆவுக்கு செல்லப் போகிறார். அதற்காக இவருக்கு பயிற்சி அளியுங்கள் என்று கூறி அவரை என்னிடத்தில் விட்டுச் சென்றார்கள். அந்த நாட்களிலும் கூட அவர் ஐவேளை தொழுகைகளை முறையாக தொழுது வந்ததுடன், காலையில் எழுந்து தஹஜ்ஜுது தொழுவதையும் நான் கண்டுள்ளேன். ஆல்கன் பள்ளிவாசல் கட்டப்பட்டு வந்த நேரத்தில் அல்லது புதுப்பிக்கப்பட்டு வந்த நேரத்தில் அவர் முறையாக வகாரே அமலில் பங்கெடுத்தார்.

ஜயிதாது (சொத்து) செயலர் கூறுகிறார்கள்: கற்கள் மற்றும் சரளைக் கற்களைச் சுமக்கக் கூடிய மிகவும் கஷ்டமான, சுமையுள்ள பணியை தமது பொறுப்பில் எடுத்துக் கொள்வார்கள். மிக மகிழ்ச்சியோடு இந்த வேலைகளை அவர்கள் செய்து வந்தார்கள். மேலும் அவர்களிடத்தில் காணப்பட்ட இன்னொரு சிறப்பம்சம் என்னவென்றால், ஸலாம் கூறுவதில் எல்லாரையும் முந்திக் கொள்வார்கள்.

அவருடைய தாயார் கூறுகிறார்கள்: மற்றவர்களுக்கு தன்னை விட முன்னுரிமை வழங்கக் கூடியவராக இருந்தார். பொதுவாக பள்ளிக்கூடத்திற்கு தனது உணவை எடுத்துச் செல்வார்கள். அங்கு உணவு உண்டு விட்டு வருவார்கள்.

ஒருநாள் வீட்டிற்கு வந்து தாயாரிடம் எனக்கு உணவு தாருங்கள் என்று கேட்டார். நான் அவரிடம், நீங்கள் உணவு கொண்டு சென்றீர்களே? என்று கேட்டேன். அதற்கு அவர், ஒரு குழந்தை உணவு கொண்டு வரவில்லை. ஆகவே நான் வீட்டிற்குச் சென்று சாப்பிட்டுக் கொள்வேன் என்று கூறி அக்குழந்தைக்கு எனது உணவைக் கொடுத்து விட்டேன் என்றார்.

இவ்வாறே தனது நண்பர்களைக் குறித்தும் அதிக அக்கறை கொண்டவர்களாக இருந்தார்கள். அவர்களிடத்தில், உங்களுடைய வருங்காலத்தைப் பற்றி எனக்கு அக்கறை உள்ளது என்று கூறி வருவார்கள். தமது நெருக்கமானவர்களிடம், நல்ல பழக்க வழக்கங்களைக் கொண்டவர்களை நண்பர்களாகத் தேர்ந்தெடுங்கள். மேலும் தமது வருங்காலத்தைச் சிறந்ததாக ஆக்க முயற்சி செய்யுங்கள் என்று கூறி வருவார். இஜ்திமா, ஆண்டு மாநாடு போன்றவற்றில் உளப்பூர்வமாக பணி செய்து வந்தார்கள். எந்த அளவு என்றால், அவருடைய மேலதிகாரிகள் கூறுகிறார்கள். ஒருமுறை அவருக்கு பாதுகாப்புப் பணி கொடுக்கப்பட்டிருந்தது. இரவில் உண்பதற்கு உணவு கொடுத்தேன். அப்பொழுது அவர் முதலில் எனது தோழர்களுக்குக் கொடுங்கள் என்று கூறிவிட்டார். வக்ஃபே நவ் குழந்தைகளுடைய பெற்றோர்களிடம் வயதில் அவர்களை விட மர்ஹூம் சிறியவராக இருந்தாலும், உங்களுடைய குழந்தைகளை ஜாமிஆவுக்கு அனுப்பி வைப்பதற்கு முயற்சி செய்யுங்கள் என்று பெரும்பாலும் வலியுறுத்தி வருவார்கள்.

மர்ஹூமுடைய தாயாரும் மிகவும் தைரியத்துடன் நோயுடைய காலத்தைப் பொறுத்துக் கொண்டார்கள். தாய் தந்தையர் இருவரும் பொறுத்துக் கொண்டார்கள். உயிர் பிழைக்க எவ்வித வாய்ப்பும் இல்லை என மருத்துவர்கள் கூறிவிட்டார்கள். மர்ஹூமுடைய தாயார் மர்ஹூமிடம், நாங்கள் உம்மை இறைவழியில் அர்ப்பணித்து விட்டோம். இப்பொழுதும் கூட நீங்கள் செல்லுமிடம் மிக நல்ல இடமாகும் என்று கூறினார்கள். அல்லாஹ்வுடைய நாட்டத்தில் திருப்தி கொள்ளுமாறு வலியுறுத்தி வந்தார்கள். மர்ஹூமும் கூட அல்லாஹ்வுடைய நாட்டத்தில் திருப்தி கொண்டவராகவே இருந்தார். மர்ஹூம் அவர்கள் என்னுடன் எடுத்துக் கொண்ட தனது ஒரு புகைப்படத்தை மருத்துவமனையில் தனது பெட்டுக்கு முன்பாக வைத்திருந்தார்கள். அது பெரும்பாலும் தப்லீகிற்கான வழிமுறையாக ஆனது. நீங்கள் எந்த சமுதாயத்தைச் சார்ந்தவர் என்று மருத்துவர்கள் கேட்கும் போது, நாங்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள்; வரக்கூடிய மஸீஹ் வந்து விட்டார் என்று நம்பிக்கை கொள்ளக் கூடியவர்கள் என்று மருத்துவர்களுக்கு கூறப்படும். இவ்வாறு தப்லீக் தொடரும்.

அமீர் சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: நான் மர்ஹூமிடம், நீங்கள் நோயாளியாக இருக்கலாம். ஆனால் அவ்வாறிருந்தும் நீங்கள் தப்லீகிற்கான வழிமுறையாக ஆகுகின்றீர்கள் என்று நான் கூறி வருவேன். இவ்விஷயத்தைக் கேட்டு அவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைவார்கள்.

பிறகு பெல்ஜியத்தின் சதர் குத்தாமுல் அஹ்மதிய்யா அவர்கள் கூறுகிறார்கள்: மர்ஹூமிற்கு கிலாஃபத்துடன் அளவற்ற நேசம் இருந்தது. ஒருநாள் நான் அத்ஃபால் மற்றும் வக்ஃபே நவ்களுக்கான வகுப்பில் காலத்தின் கலீஃபாவுக்கு கடிதம் எழுதுமாறு கூறினேன். கடிதம் எழுதுமாறு கூறியபோது மர்ஹூம் அவர்கள் என்னிடத்தில் வந்தார்கள். முரப்பி சாஹிப்! எனக்கு உருது மொழியில் கடிதம் எழுதத் தெரியாது. நீங்கள் எனக்கு எழுதித் தாருங்கள். நான் அதைப் பார்த்து எழுதிக் கொள்கிறேன் என்று கூறினார்கள். நான் அவரிடம், மற்ற குழந்தைகள் டச்சு மொழியில் எழுதுகிறார்கள். நீங்களும் அவ்வாறே எழுதுங்கள் என்று கூறினேன். இது ஜாமிஆவுக்கு வருவதற்கு முன்பு உள்ள விஷயமாகும். அப்பொழுது மர்ஹூம் அவர்கள், என்னுடைய கடிதம் நேரடியாக காலத்தின் கலீஃபாவிடம் செல்ல வேண்டும்; மேலும் காலத்தின் கலீஃபா அவர்கள் எனக்காக துஆ செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன் எனப் பதிலளித்தார்.

பிறகு முரப்பி சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: ரவூஃப் பின் மக்சூது அவர்கள், உயிர், பொருள், நேரம் மற்றும் கண்ணியத்தைத் தியாகம் செய்வதற்கு நான் எந்நேரமும் ஆயத்தமாக இருக்கிறேன் என்று எழுந்து நின்று செய்த உறுதிமொழியை தனது இறுதி மூச்சு வரை நிறைவேற்றினார்கள். பெரும் எண்ணிக்கையில் அஹ்மதி அல்லாத பெல்ஜியம் நண்பர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் ஏங்கி ஏங்கி சத்தமிட்டு அழுவதை நான் எனது கண்களால் கண்டேன். அவர்களில் ஒரு நண்பரிடம் மர்ஹூம் ரவூஃப் பின் மக்சூது அவர்களைப் பற்றி நான் கேட்டபோது, அவர் அழுதவாறு, இன்று எங்களுடைய மிகவும் அன்பிற்குரிய, எங்கள் மீது அக்கறை கொள்ளக்கூடிய நண்பர் எங்களை விட்டுப் பிரிந்து சென்று விட்டார். சுக துக்கங்களில் பங்கெடுக்கக்கூடிய இவ்வாறான நண்பரும் கூட யாருக்குத்தான் கிடைப்பார்கள் என்று கூறினார்.

பிறகு மர்ஹூமுக்கு அதிக தப்லீக் ஆர்வமும் இருந்தது. Messiah has come – மஸீஹ் வந்து விட்டார் என்ற இந்த இயக்கத்தை நாங்கள் ஆரம்பித்தோம். சில நேரங்களில் இதைக் கூறுவதற்கு பிறர் தயக்கம் காட்டுவார்கள். ஆனால் அப்போது மர்ஹூமோ மக்களை தேடிப் பிடித்துக் கொண்டு வருவார்கள். அவர்களுக்கு தப்லீக் பிரசுரங்களை வழங்குவார்கள். அவர்களுடன் பேச வைப்பார்கள். விருந்தினர்களையும் அறிமுகம் செய்து வைப்பார்கள். ஒவ்வொரு தப்லீக் அமர்வின்போதும்

## திருக்குர்ஆனிலிருந்து...

நீங்கள் நன்றி செலுத்தி நம்பிக்கையும் கொள்வீர்களாயின் உங்களைத் தண்டிப்பதில் அல்லாஹ்விற்கு என்ன கிடைக்கப் போகிறது? அல்லாஹ் மதிக்கக் கூடியவனும் நன்று அறிபவனுமாவான். (4:148)

A. SAMSUL ALAM - Active Ameer, Melapalayam

விருந்தினர்களை அழைத்து வருவார்கள். எவ்வாறிருந்தபோதிலும், இவர் ஜாமிஆ தேர்ச்சி பெறுவதற்கு முன்பே மிகச் சிறந்த முரப்பியாகவும், முபல்லிக் ஆகவும் இருந்தார்கள். அல்லாஹ் தனது தீர்ப்புகளின் ஞானத்தை அவனே நன்கறிவான். சில சமயங்களில் மிகச் சிறந்த மனிதர்களை வெகு விரைவில் தம்மிடத்தில் அழைத்துக் கொள்கிறான். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக! மேலும் அவருடைய அந்தஸ்துகளை உயர்த்துவானாக! அவருடைய பெற்றோர்களுக்கும் பொறுமை மற்றும் தைரியத்தை வழங்குவானாக!

***இரண்டாவது ஜனாஸா, இஸ்லாமாபாத் மாவட்டத்தின் முன்னாள் துணை அமீர் ஸஃபர் இக்பால் குறைஷி சாஹிப்*** அவர்களுடையதாகும். இவர் செப்டம்பர் 3 ஆம் தேதி தமது 87 வது வயதில் மரணமடைந்தார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

ஒரு கலப்பற்ற குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தார்கள். மர்ஹூமுடைய பாட்டனார் உபைதுல்லாஹ் குறைஷி சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபி ஆவார்கள். அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் 1904 ஆம் ஆண்டு பைஅத் செய்தார்கள். மர்ஹூமுடைய மனைவி அமத்துல் ஹமீது சாஹிபா அவர்களின் பாட்டனார் ஹஸ்ரத் கலீஃபா நூருத்தீன் சாஹிப் அவர்களும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஒரு சஹாபி ஆவார்கள். இந்த கலீஃபா நூருத்தீன், முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கிடையாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் துஹ்ஃபா கோல்டவிய்யா என்ற தமது நூலில், காஷ்மீர் ஸ்ரீநகரில் கான்யார் வீதியில் உள்ள ஈஸா நபியுடைய கல்லறையைக் குறித்து ஆய்வு செய்த பணியில் அன்னார் செய்த தொண்டைப் பற்றிக் குறிப்பாக எழுதியுள்ளார்கள்.

ஸஃபர் இக்பால் குறைஷி சாஹிப் அவர்கள் ஆரம்பக் கல்வியை அமிர்தசரஸில் கற்றார்கள். பிறகு இந்தியா பாகிஸ்தான் பிரிவினையின் போது அந்நேரத்தில் பிண்டியா வந்து அங்கு மெட்ரிக் படித்தார்கள். பிறகு Engineer University –ல் பட்டம் பெற்றார்கள். பிறகு அரசாங்க வேலைக்குச் சென்று விட்டார்கள். பிறகு கிரேக்க நாட்டில் M.Sc. பட்டம் பெற்றார்கள். அதன் பிறகு 1994 ஆம் ஆண்டு Chief Engineer ஆக பணியாற்றி ஓய்வு பெற்றார். அதன் பிறகு இவர் இஸ்லாமாபாத் மாறுதலாகி விட்டார்கள். அங்கு பல்வேறு ஜமாஅத் தொண்டுகளைச் செய்து வந்தார்கள். பிறகு 1998 ஆம் ஆண்டு இவர் துணை அமீராக நியமிக்கப்பட்டார்கள். அந்த இடைப்பட்ட காலத்தில் பல்வேறு தருணங்களில் செயல் அமீராகவும் நியமிக்கப்பட்டு வந்தார்கள். 2019 ஆம் ஆண்டு வரை ஏறக்குறைய 21 வருடங்களை விட அதிகமான காலக்கட்டம் துணை அமீராக இவர்கள் பணியாற்றி இருக்கிறார்கள்.

முதுமையின் காரணமாக பலவீனங்கள் தோன்றி விட்டன. நோயாளியாக இருந்தபோதிலும், தொடர்ச்சியாக பள்ளிவாசலுக்கு வந்து தமது தினசரி பணிகளைச் செய்வார்கள். மிகக் குறைவாகப் பேசக் கூடியவர்களாகவும், சிறந்த ஆலோசனைகளை வழங்கக் கூடியவர்களாகவும் திகழ்ந்தார்கள். ஜமாஅத்தின் கட்டமைப்புத் துறையில் நல்ல அனுபவம் கொண்டவர்களாக இருந்தார்கள். மிகக் கவனத்துடனும், எச்சரிக்கையுடனும் பணிகளைச் செய்யக் கூடியவராக இருந்தார்கள். ஜமாஅத்தின் செல்வத்தைப் பற்றி அக்கறை கொண்டவராக இருந்தார்கள். நுட்பமான உணர்வு கொண்ட மனிதராக அவர் இருந்தார்.

நான் நாஸிர் அஃலாவாக இருந்தபோது அவரை மிக அருகில் இருந்து கண்டுள்ளேன். மாஷா அல்லாஹ்! மிகவும் தன்னலமற்று, பணிவுடன் வேலை செய்து வந்தார்கள். தன்னை விட மிகவும் வயது குறைவான, சிறியவர்களாக இருக்கக்கூடிய தன்னுடைய அதிகாரிகளுக்கும் முழுமையாகக் கட்டுப்பட்டு வந்தார்கள். அவர்கள் தமக்குப் பின்னால் தமது மனைவி அமத்துல் ஹமீது ஸஃபர் சாஹிபாவைத் தவிர நான்கு மகள்களை விட்டுச் சென்றுள்ளார்கள். அமத்துர் ரஷீது சாஹிபா, டாக்டர் சதஃப் ஸஃபர் சாஹிபா, ஷாஸியா சவுத்ரி சாஹிபா மற்றும் ஆயிஷா தாரிக் சாஹிபா ஆகியோர். ஒருவர் கனடாவில் இருக்கிறார். மற்றவர்கள் லாஹூரில் இருக்கிறார்கள்.

அவரது மகள் ஆயிஷா ஸஃபர் கூறுகிறார்: குழந்தைப் பருவத்தில் நான் பள்ளிக்கூடத்திற்குச் செல்ல ஆரம்பித்தபோது, வருடாந்திர தேர்வுக்கு முன்பாக காலத்தின் கலீஃபாவுக்கு என் சார்பாக கடிதம் எழுதுவார்கள். பிறகு நான் Position பெறும் போது மீண்டும் கடிதம் எழுதுவார்கள். அந்தக் கடிதத்திற்கான பதில் வரும்போது அதைப் படித்துக் காட்டுவார்கள். நான் பெரியவனாக ஆனபோது நானே கடிதம் எழுதுமாறு வலியுறுத்தினார்கள். மேலும் அந்தக் கடிதத்தின் மாதிரியை உருவாக்கித் தருவார்கள். இவ்வாறு சிறிய வயதிலிருந்தே மிகவும் அன்புடன் என்னுடைய உள்ளத்தில் கிலாஃபத்தின் மீது அன்பையும், கட்டுப்படக்கூடிய உணர்வையும் ஏற்படுத்தினார்கள். அல்லாஹ் மர்ஹூமுடன் கருணை மற்றும் பாவமன்னிப்புடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அவருடைய உறவினர்களுக்கும் பொறுமை மற்றும் நிம்மதியை வழங்குவானாக.

***அடுத்த ஜனாஸா, செனிகலைச் சார்ந்த கண்ணியத்திற்குரிய காபினே காபாஜா காட்டே சாஹிப்*** அவர்களுடையதாகும். இவர் ஆகஸ்டு 24 ஆம் தேதி தமது 85 வது வயதில் மரணமடைந்தார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

மிகவும் தீரமானவராகவும், கலப்பற்ற உள்ளம் கொண்டவராகவும், கிலாஃபத்துடன் நேசம் கொண்டவராகவும், ஜமாஅத்தின் தன்மானமுள்ளவராகவும், தொண்டாற்றும் உணர்வு உள்ளவராகவும், தியாகம் செய்யக் கூடியவராகவும், விருந்தோம்பல் செய்யக் கூடியவராகவும் திகழ்ந்தார்கள். இவை அன்னாரது வெளிப்படையான பெரும் சிறப்புகளாக இருந்தன. மிகவும் சிரத்தை மேற்கொண்டு ஜமாஅத்தின் குழுவுக்கு விருந்தோம்பல் செய்வார்கள். ஜமாஅத்தின் குழு அவரது பிராந்தியத்தில் இருக்கும் வரை அவரே எப்பொழுதும் விருந்தோம்பல் செய்ய வேண்டும் என விருப்பம் கொண்டிருந்தார்கள்; வலியுறுத்தி வந்தார்கள். விருந்தினர்கள் எப்பொழுதாவது வெளியிலிருந்து உணவு உண்டு விட்டால், எனக்க ஏன் வாய்ப்பு தரப்படவில்லை? என்று கோபமடைவார்கள். விருந்தினர்களுக்காக தமது அறையைக் காலி செய்து கொடுப்பார்கள். மேலும் அவர்களுக்கு எல்லா விதமான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பார்கள். சோஸியலிஸ்ட் கட்சியின் சார்பாக தேர்தல்களில் பங்கெடுத்து 18 வருடங்கள் வரை நாட்டின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறார்கள். ஒரு தூய, விசுவாசமுள்ள அஹ்மதியாக இருந்தார்கள். அங்கு ஜமாஅத் ரிஜிஸ்டர் ஆகாதவரை ஜமாஅத்தின் சொத்துக்கள் அவருடைய பெயரில்தான் இருந்தன.

மிஷனரி இன்சார்ஜ் எழுதுகிறார்கள்: 2012 ஆம் ஆண்டில் நான் செனிகல் வந்தேன். அதன் பிறகு ஜமாஅத் ரிஜிஸ்டர் ஆகி விட்டது. அப்போது மர்ஹூம் கூறியது என்னவென்றால், வாழ்க்கையில் எந்த உத்திரவாதமும் கிடையாது. நீங்கள் உடனடியாக ஜமாஅத்தின் சொத்துக்களாக இருக்கும் அந்த அமானிதத்தை ஜமாஅத்தின் பெயருக்கு மாற்றி விடுங்கள் என்று கூறினார்கள்.

மிஷனரி இன்சார்ஜ் அவர்கள் தொடர்ந்து எழுதுகிறார்கள்: எப்பொழுதெல்லாம் கஷ்டம் வந்ததோ அப்பொழுதெல்லாம் அதை எதிர்கொள்வதற்காக முதல் வரிசையில் நிற்பார்கள். ஒரு மிஷனரியை விட அதிகமாக பணியாற்றக் கூடியவர்கள் ஆவர்.

நீண்ட காலமாக டம்பாகொண்டா என்ற பிராந்தியத்தின் ஜமாஅத் சத்ராக தொண்டாற்றி இருக்கிறார்கள். தலைமையக செயற்குழுவில் வெளியுறவுத்துறைச் செயலராகத் தொண்டாற்றக் கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறார். மரணத்திற்கு முன்பு மூன்று ஏக்கர் நிலத்தை பள்ளிக்கூடம் கட்டுவதற்காக ஜமாஅத்திற்கு அளித்திருக்கிறார்கள். அதேபோன்று ஜமாஅத்தின் பிராந்திய மிஷன் ஹவுஸுக்காகவும் மூன்று ஏக்கர் நிலத்தை தனியாக வைத்திருக்கிறார். மரணமடைவதற்கு முன்பு ஆறு ஏக்கர் நிலத்தின் பேப்பர்களை நம்முடைய முபல்லிக் டெகோ மீர் சாஹிபிடம் ஒப்படைத்து, இது ஜமாஅத்தின் அமானிதமாகும். இதை கவனமாக வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறியவாறு, நான் கனீகினாகரி செல்கிறேன். நான் திரும்ப வருவேன் என்ற நம்பிக்கை

இல்லை எனக் கூறியிருக்கிறார். இங்கு பலமுறை ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ளவும் வந்துள்ளார். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் காலத்திலிருந்தே வருகிறார். கடைசியாக 2019 ஆம் ஆண்டினுடைய ஆண்டு மாநாட்டிலும் கலந்து கொண்டுள்ளார். என்னையும் சந்தித்தார். அங்குள்ள உள்ளூர் அமீர் சாஹிப் அவர்களிடம் வாழ்க்கையின் மீது எந்த நம்பிக்கையும் கிடையாது. என்னுடைய விருப்பம் என்னவென்றால், காலத்தின் கலீஃபாவின் முன்னால் நான் அதிக நேரம் அமர்ந்து பார்த்துக் கொண்டே இருக்க ஆசைப்படுகிறேன் எனக் கூறியிருக்கிறார். இவ்வாறு அவர் அமர்ந்திருக்கிறார். பிறகு என்னைச் சந்திக்கும்போது, எனது நோக்கம் நிறைவேறி விட்டது என்று கூறினார்.

மவ்லானா முனவ்வர் குர்ஷீது சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: செனிகலில் மிகவும் ஒப்புக்கொள்ளப்பட்ட அரசியல் பிரமுகராகவும், ஏற்பாட்டாளராகவும் திகழ்ந்தார்கள். செனிகலுடைய மிகப் பிரபல்யமான நகரமான டாம்பாகொண்டாவைச் சார்ந்தவர்கள். இவருடைய குடும்பம் அரசியல் குடும்பமாகும். அடிப்படையில் இவர்கள் கல்வித் துறையுடன் தொடர்புடையவர்கள். பிறகு அரசியல் களத்திற்கு வந்தார்கள். 1995 ஆம் ஆண்டில் தேசிய சட்டமன்றத்தின் துணை சபாநாயகர் மதிப்பிற்குரிய ஜக்ஜீன் அவர்களின் மூலமாக ஜமாஅத்தின் தூதுச் செய்தி அவர்களுக்கு கிடைத்தது. பிறகு வெகு விரைவிலேயே அல்லாஹ் அவரது உள்ளத்திலுள்ள முடிச்சுகளை அவிழ்த்தான். அதன் பிறகு மனமகிழ்ச்சியுடனும், திறந்த உள்ளத்துடனும் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்து விட்டார்கள்.

செனிகலில் ஆரம்பக் காலத்தில் பைஅத் செய்தவர்களில் கூலி வேலை செய்யக் கூடியவராகவும், ஏழைகளாகவும் இருந்தார்கள். தங்களால் இயன்ற அளவு அவர்கள் பொருள் தியாகம் செய்து வந்தார்கள். ஆனால் மர்ஹூம் பைஅத் செய்த பிறகு, அல்லாஹ்வுடைய அருள் எப்பொழுதும் திறந்த உள்ளத்துடன் பொருள் தியாகம் செய்து வருவதற்கான வாய்ப்பைப் பெற்றார்கள். மிகவும் தைரியசாலியான, துணிவுமிக்க அஹ்மதியாகத் திகழ்ந்தார்கள். இறைவன் பக்கம் அழைப்பதில் மிக்க ஆர்வம் உடையவர்களாக இருந்தார்கள். சந்திக்கக்கூடிய ஒவ்வொருவருக்கும் உண்மையின் பக்கம் அழைப்பு விடுப்பார்கள். எந்த அளவுக்கு என்றால், நாட்டின் ஜனாதிபதிக்கும் ஜமாஅத்தை அறிமுகம் செய்து வைப்பதற்கான வாய்ப்பைப் பெற்றார்கள். மர்ஹூமுடைய நட்பு வட்டம் மிகவும் பரந்ததாக இருந்தது. சந்திக்கக்கூடிய ஒவ்வொருவருக்கும் செய்தியை எட்ட வைப்பதற்கு முயற்சி செய்வார்கள். எப்பொழுதுமே அவருடைய வண்டியில் ஜமாஅத் நூல்களும், பைஅத் படிவமும் இருக்கும். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அவருடைய அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அவருடைய வழித்தோன்றலிலும் இந்தக் கலப்பற்ற தன்மை மற்றும் விசுவாசத்தை உருவாக்குவானாக. அவர்களின் சந்ததிகளில் அஹ்மதி அல்லாதவர்களுக்கு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை வழங்குவானாக.

***அடுத்த ஜனாஸா, மதிப்பிற்குரிய முபஷ்ஷிர் லதீஃப் சாஹிப்*** அவர்களுடையதாகும். இவர் உச்சநீதிமன்றத்தின் வக்கீலாக இருந்தார்கள். தற்போது கடனாவில் வசித்து வந்தார்கள். இவர் இதற்கு முன்பு லாஹூரில் வசித்து வந்தார்கள். இவர்கள் மே மாதம் 5 ஆம் தேதி தமது 85 வது வயதில் மரணமடைந்தார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

அல்லாஹ், அல்லாஹ்வின் தூதர் (ஸல்), ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) மற்றும் அஹ்மதிய்யா கிலாஃபத்தின் மீது அளவற்ற நேசம் கொண்டிருந்தார்கள். இவருடைய தாய்வழிப் பாட்டனார் மதிப்பிற்குரிய ஷேக் மெஹர் அலி சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நெருங்கிய நண்பராக இருந்தார்கள். ஹோஸியார்பூரில் இவரது வீட்டில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நோன்பு இருந்தார்கள். அந்தக் காலத்தில்தான் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது அவர்களைப் பற்றிய கண்ணியமிகுந்த முன்னறிவிப்பை வழங்கினான். 17 வருடங்களாக முபஷ்ஷிர் லதீஃப் சாஹிப் அவர்கள் லாஹூரின் ஃபேஸல் டவுண் ஜமாஅத்தின் சதர் ஆக இருந்தார்கள். பாகிஸ்தானில் ஜமாஅத்தின் வக்கீல் குழுவில் இவரும் இருந்தார்கள். அதை பெருமையாகக் கருதினார்கள். எண்ணற்ற கைதிகளுக்கு தொண்டாற்றக்கூடிய, உதவி செய்யக்கூடிய வாய்ப்பு இவர்களுக்கு கிடைத்துள்ளது. 1974 ஆம் ஆண்டு ஜமாஅத் சார்பாக பிரதிநிதித்துவம் செய்த மூன்று வக்கீல்களில் இவரும் ஒருவராவார். 46 வருடங்களாக பஞ்சாப் யுனிவர்சிட்டியில் ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார்கள். இவர் University Law College –ல் ஆசிரியராகவும் இருந்தார்கள். லாஹூரில் மாடல் டவுண் பள்ளிவாசலில் தாக்குதல் தொடுக்கப்பட்ட போது இவரும் அங்கிருந்தார். இவர் அல்லாஹ்வின் அருளால் பாதுகாப்பாக இருந்தார். ஆனால் இவருடைய தம்பி நயீம் சாஜித் சாஹிப் அவர்கள் அந்த இடத்திலேயே ஷஹீதாகி விட்டார்கள். அதன் பிறகு இவரும் கனடாவுக்குச் சென்று விட்டார்கள்.

தொழுகையையும், நோன்பையும் முறையாகப் பேணக் கூடியவராக இருந்தார்கள். அத்துடன் தஹஜ்ஜுத்தையும் மிகவும் முறையாகப் பேணி வந்தார்கள். திருக்குர்ஆனுடன் எல்லையற்ற நேசம் கொண்டிருந்தார்கள். அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்திருந்தார்கள். இவர் தமக்குப் பின்னால் மனைவியையும், ஆறு பெண் பிள்ளைகளையும், அதிகமான பேரன் பேத்திகளையும், கொள்ளுப் பேத்திகளையும் விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

லாஹூர் ஜமாஅத்தின் அமீர் மலிக் தாஹிர் சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள்: மதிப்பிற்குரிய வழக்குறைஞர் முபஷ்ஷிர் லதீஃப் சாஹிப் அவர்கள் மிகத் தகுதியுள்ள, உயர்க்கல்வி கற்ற வக்கீலாக இருந்தார்கள். அக்காலத்தில் இங்கிருந்தும் அவர்கள் Law Degree பெற்றிருந்தார்கள். இவர்களுக்கு நீதித்துறையில் அதிக கண்ணியம் இருந்தது. 1984 ஆம் ஆண்டிற்குப் பிறகு நம்முடைய இளைஞர்களுக்கு எதிராக தூய கலிமா குறித்து வழக்கு தொடுக்கப்பட்டபோது, ஜமாஅத்தின் வழக்கு சாதாரண குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருந்தது. முபஷ்ஷிர் லதீஃப் சாஹிப் அவர்கள் உயர்நீதிமன்றத்தை விட கீழ் நிலையில் உள்ள நீதிமன்றங்களில் வாதாடுவது கிடையாது. ஆனால் ஜமாஅத்தின் நன்மைக்காக மேஜிஸ்ட்ரேட் முன்பாகவும் வாதாடி வந்தார்கள். மேலும் ஜமாஅத்தின் வழக்குகளில் தன்னலமற்று தொண்டாற்றி வந்திருக்கிறார்கள். மிகவும் கணிவான மற்றும் சிறந்த சட்ட ஆலோசகராகத் திகழ்ந்தார்கள். பல எண்ணற்ற மேஜிஸ்ட்ரேட்களும், நீதிபதிகளும் அவருடைய சீடர்களாக இருந்தார்கள். தமது மாணவர்களுக்கு முன்னால் வாதாடுவதில் இவர் எவ்வித தயக்கமும் மேற்கொண்டது கிடையாது. பொதுவாக உச்சநீதிமன்றத்தின் வக்கீல் மற்றும் உயர்நீதிமன்றத்தின் வக்கீல் மேஜிஸ்ட்ரேட்டின் கோர்ட்டில் ஆஜராவது கிடையாது.

அவருடைய சட்ட ஆலோசகர் முபாரக் தாஹிர் சாஹிப் அவர்கள் கூறுகிறார்கள்: முபஷ்ஷிர் லதீஃப் சாஹிப் அவர்களுடைய ஜமாஅத் தொண்டு 1974 ஆம் ஆண்டு ஆரம்பித்தது. அன்னார் சமதானி கமிஷனில் இஃஜாஸ் ஹுஸைன் பட்டாலவி சாஹிப் என்ற அஹ்மதி அல்லாத வக்கீலுக்கும் ஒத்தாசை புரிந்துள்ளார்கள். 1984 ஆம் ஆண்டில் உரிமைக் கட்டளைக்கு எதிரான வழக்கு ஷரீஅத் கோட்டில் தொடுக்கப்பட்டது. அந்தக் குழுவிலும் முபஷ்ஷிர் லதீஃப் சாஹிப் அவர்கள் இருந்தார்கள். நியாயச் சட்டத்தின் கீழ் அதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாதுதான். ஒன்றும் நடக்காது என்று ஏற்கனவே தெரியும். ஆனால் அவர்கள் தனது தோழர்களுடன் இணைந்து மிக்க உழைப்புடன் இந்த முழு வழக்கையும் ஆயத்தம் செய்தார்கள். அல்லாஹ் அவருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அவருடைய உறவினர்களுக்கும் அவருடைய நன்மைகளைத் தொடரச் செய்யக்கூடிய வாய்ப்பை வழங்குவானாக. அவர்களுக்கு நிம்மதியை வழங்குவானாக.

தொழுகைக்குப் பிறகு இந்த மர்ஹூம்கள் அனைவரின் ஜனாஸா தொழுகையும் நடைபெறும் – இன்ஷா அல்லாஹ்.

**(தமிழாக்கம் : மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மது)**

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 15 October 2020 Issue No. 42

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

ANNUAL SUBSCRIPTION : Rs.500/- (Per Issue Rs. 9/-) (WEIGHT - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

மூடிக் கொள்ள வேண்டுவதில்லை; ஸ்திரியானவள் புருஷனுடைய மகிமைக்குரியவளாய் இருக்கிறாள் என எழுதப்பட்டுள்ளது. (I கொரிந்தியர் 11:7 காண்க) மேலும் உபதேசம் பண்ணவும் புருஷன்மேல் அதிகாரம் செலுத்தவும் ஸ்திரியானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை என்றும் எழுதப்பட்டுள்ளது. (I தீமோத்தேயு 2:12 காண்க)

இஸ்லாம் மட்டுமே பெண்களின் மனிதத்துவத்தை பெரிதாகக் காட்டி இருக்கிறது. மேலும் ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள்தான் பெண்களுக்கு மனிதன் என்ற முறையில் சரிசமமான உரிமைகளை நிலை நாட்டிய முதல் மனிதராவார். மேலும் وَلَهُنَّ مِثْلُ الَّذِي عَلَيْهِنَّ بِالْمَعْرُوفِ (ஆண்களாகிய) அவர்களுக்கு இருக்கும் உரிமைகளைப் போன்றே (பெண்களாகிய) அவர்களுக்கும் இருக்கின்றது என்பதன் விளக்கத்தை மக்களுக்கு நன்றாகப் புரிய வைத்தார்கள். அன்னாரின் சொற்களில் பெண்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுதல், அவர்களின் உரிமைகள், அவர்களின் தகுதிகளைப் பற்றி எந்த அளவுக்கு வழிகாட்டல்கள் இருக்கின்றனவோ அதில் பத்தில் ஒரு பகுதி கூட மற்ற மார்க்கங்களின் தலைவர்களிடம் காணப்படுவதில்லை.

பெண்களுக்கு அவர்களுக்குரிய உரிமைகளைக் கொடுங்கள் என்று இன்றைய காலத்தில் உலகில் கூச்சலிடுகின்றனர். சில மேற்கத்திய இளைஞர்கள் பெண்களுக்கான உரிமையைக் கிறித்தவம் தான் கொடுத்திருக்கின்றது என்ற அளவுக்கு கூறி விடுகின்றனர். ஆனால் பெண்களின் உரிமைகள் தொடர்பாக இஸ்லாம் கொடுத்திருக்கும் பரந்த போதனைக்கு எதிரில் கிறித்தவ போதனை நெருங்கவும் முடியாது.

வாரிசுகளில் தன் தாயையும் பங்கிட்டுக் கொடுக்கும் அளவுக்கு அரபிகளிடம் பழக்கம் இருந்தது. ஆனால் இஸ்லாம்தான் பெண்ணுக்கு வாரிசுரிமையை கொடுத்திருக்கிறது. மனைவிக்கான வாரிசுரிமையைக் கூறுவதற்கும், தந்தையின் வாரிசுரிமையை மகளுக்கும் சில நிலைமைகளில் சகோதரர்களின் சொத்தில் சகோதரிக்கும் உரிமை கொடுத்துள்ளது.

சுருக்கமாக, وَلَهُنَّ مِثْلُ الَّذِي عَلَيْهِنَّ என்று கூறுகிறான். அதாவது, மனித உரிமைகளைப் பொருத்தவரை ஆண்களைப் போன்றே பெண்களுக்கும் உரிமை இருக்கிறது. அவ்விருவரில் எந்த வித்தியாசமும் இல்லை. அல்லாஹ் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சரிசமமான கட்டளைகளை வழங்கி இருப்பது போன்று வெகுமதிகளிலும் அவர்களை சரிசமமானவர்–களாக்கி இருக்கிறான். மேலும் எந்த அருள்களுக்கு ஆண்கள் உரிமை உடையவர்களாக இருக்கிறார்களோ இஸ்லாமிய போதனையின்படி மறுமை நாளில் அதே அருள்கள் பெண்களுக்கும் கிடைக்கும். சுருக்கமாக, அல்லாஹ் இவ்வுலகில் (பெண்களாகிய) அவர்களின் உரிமயைப் பறிக்கவில்லை; மறுவுலகிலும் அவர்கள் எந்த அருளில் இருந்தும் விலக்கி வைக்கப்படமாட்டார்கள்.

ஆனால் وَلِلرِّجَالِ عَلَيْهِنَّ دَرَجَةٌ என்ற அறிவிப்பை செய்தான். அதாவது உரிமையைப் பொருத்தவரை ஆண், பெண் ஆகியோருக்கிடையில் எவ்வித வித்தியாசமும் இல்லை. ஆனால் பொறுப்பைப் பொருத்த வரையில் ஆண்களுக்கு பெண்களை விட ஓர் உயர்வு இருக்கிறது. இதற்குரிய உதாரணம் ஒரு நியாயாதிபதி மனிதன் என்ற முறையில் பொதுவான மனிதனைப் போன்ற உரிமை கொண்டவராவார். குறைவிலும் குறைவான மனிதன்கூட அநீதி, அக்கிரமம் செய்வதற்கு அனுமதி இல்லாததைப் போன்றே ஒரு நியாயயாதிபதிக்கும் உரிமை இல்லை. எனினும் அவர் நியாயாதிபதியாக இருப்பதால் தனக்குக் கீழுள்ளவர்களை விட அவருக்கு உயர்வு இருக்கிறது. சட்டப்படி மற்றவர்களுக்கு தண்டனை அளிக்கும் உரிமை விவகாரங்களில் ஆண், பெண் இருவருக்கும் சரிசமமான உரிமை இருக்கிறது. ஆயினும் ஆண் கண்காணிப்பாளர் என்ற காரணத்தால் அல்லாஹ் அவருக்கு சிறப்பை வழங்கி இருக்கிறான். ஆனால் மறுபக்கம் பெண்களுக்கு உள்ளத்தை ஈர்க்கக்கூடிய ஆற்றலை வழங்கி இருக்கிறான். அதன் காரணமாக அவள் ஆண்கள் மீது சில நேரத்தில் வெற்றி ஏற்பட்டு விடுகின்றது. வங்காளத்தில் உள்ள வித்தை காட்டும் பெண்கள் பொதுவாக புகழ் பெற்றிருப்பது போன்று, ஆண்கள் மீது வித்தை காட்டி விடுகின்றனர். எனவே ஆணுக்கு பெண் மீது ஒருவகையில் சிறப்பை வழங்கி இருப்பதைப் போன்று பெண்ணுக்கு உள்ளத்தை ஈர்க்கும் ஆற்றலை வழங்கி ஆண் மீது வெற்றி வழங்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக, சில நேரத்தில் எல்லா விவகாரங்களும் பெண்களின் கையில் கொடுத்திருப்பது போன்று அப்பெண்கள் ஆண்கள் மீது ஆதிக்கம் செய்கின்றனர்.

உண்மையில் ஒவ்வொரு நபருக்கும் ஒவ்வொரு விதமான அதிகாரம் இருக்கிறது. ஷரீஅத்தின் கட்டளைகளையும், அமைப்பை நிலைநாட்டுவதையும் பொருத்தவரை அல்லாஹ் ஆணுக்கு பெண் மீது சிறப்பை வழங்கியிருக்கின்றான். உதாரணமாக, ஒரு பெண் தன் பெற்றோரின் அனுமதியின்றி திருமணம் செய்ய முடியாது. இந்தக் கட்டளை தன்னிடத்தில் மிகவும் பெரிய பயன்களைக் கொண்டுள்ளது. ஐரோப்பாவில் ஆயிரக்கணக்கான உதாரணங்கள் காணப்படுகின்றன. சில மக்கள் ஏமாற்றுக்காரர்களாக இருந்தார்கள். ஆனால் அவர்கள் நல்ல ஒழுக்கமுள்ளவர்களாக இருந்தார்கள். அவர்கள் மாபெரும் வீட்டைச் சேர்ந்த பெண்களை மணமுடித்தார்கள். பிறகு பலவிதமான மோசங்கள் உருவாகி விட்டன. ஆனால் நமது நாட்டில் அப்படி நடப்பதில்லை. ஏனெனில் இனம் பார்க்கும் நேரத்தில் தந்தை சிந்திக்கின்றார். தாய் சிந்திக்கின்றார். சகோதரர் யோசிக்கின்றார். உறவினர்கள் ஆய்வு செய்கின்றனர். இவ்வாறு முடிவு செய்யும்போது அது ஐரோப்பாவில் தென்படுகின்ற பொதுவான அந்த குறைகளிலிருந்து தூய்மையானதாக இருக்கிறது. ஐரோப்பாவில் இந்தக் குறை எந்த அளவுக்கு இருக்கிறதென்றால், ஜெர்மனியின் சென்ற கால இளவரசரின் சகோதரி இந்த அறிவீனத்தின் காரணமாகவே ஒரு சமையல்காரரை திருமணம் செய்து கொண்டார். அவளுடைய நாகரிகம் நன்றாக இருந்தது. மேலும் அவர் ரோமரின் மகள் என்தை பிரசித்தி பெறச் செய்து விட்டார். பின்னர் அவர் எங்கோ சமையல்காரராக வேலை செய்கிறார் எனத் தெரிய வந்தது. இந்த சம்பவங்கள் ஐரோப்பாவில் அதிகமான நடக்கின்றன. இந்த நிகழ்வுகளிலிருந்து, இறைவன் ஆணை கண்காணிப்பாளராக ஆக்கியிருக்கிறான் என்பது பற்றி தீர்மனித்தது முற்றிலும் சரியானது என்பது நிரூபணமாகின்றது. பெண்கள் மீது அநியாயம் செய்ய வேண்டும் என்பதோ அல்லது அவளுடைய உரிமை பறிக்கப்பட வேண்டும் என்பதோ ஷரீஅத்தின் நோக்கமன்று. மாறாக, ஷரீஅத்தின் இந்த சிறப்பின் நோக்கம் என்னவென்றால், எந்த விஷயங்களில் பெண்களுக்கு நஷ்டம் ஏற்பட முடியுமோ, அவற்றில் பெண்களுக்கு நஷ்டத்திலிருந்து பாதுகாப்பாக வைத்திருக்கிறது. இதன் காரணமாகவே எந்த விஷயங்களிலிருந்து பெண்களுக்கு எந்த நஷ்டமும் ஏற்பட முடியாதோ அவற்றின் உரிமையை இறைவன் அவர்களுக்கு தானே வழங்கி விட்டான். எனவே திருக்குர்ஆன் கூறியிருப்பது தன்னிடத்தில் பெரும் ஞானங்களையும் சீர்திருத்தங்களையும் கொண்டுள்ளது. உலகம் இதற்கு மாறாக செயல்படுகின்றதென்றால் அது பலவிதமான நஷ்டங்களையும் சகித்து வருகிறது. அது, இஸ்லாத்திற்கு எதிராக செயல்படுவது ஒருபோதும் நல்ல முடிவுகளை எட்ட முடியாது.''

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 2 பக்கம் 512–513 காதியான் பதிப்பு 2010)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad